Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



பளிச்சிடும் வெண்மைக்கு

அன்னா சொட்டு நீலம்

ANNA INDUSTRY-INUVIL

Tele Phone: 2223565

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 05 (26.04.2004) திங்கட்கிழமை இதழ் :207

புலிகளின் தலைமைச் செயலகத்தின்

## உப அலுவலகம் ஒன்று மட்டக்களப்பில் திறப்பு!

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தின் உப அலுவலகம் மட்டக்களப்பு இலுப்படிச் சேனையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பாக மார்சல் என்பவரை தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நியமித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உப அலுவலகத்தினூடாக தலைமைச் செயலகத்துடனான தொடர்புகளை பொதுமக்கள் ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலகத்தின் உப அலுவலகமாக பிராந்திய மட்டத்தில இலுப்படிச்சேனையிலேயே முதலாவது அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விகாரைகள், பிக்குகளுக்கு பாதுகாப்பு வழங்க பணிப்பு

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை

இனந்தெரியாத குழுக்களினால் பௌத்த விகாரைகளும், பிக்குகளும தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து விகாரைகளுக்கும், பிக்குகளுக்கும் பாதுகாப்பினை வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவைப் பணித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியாவில் உள்ள பௌத்த விகாரையும் அதன் தலைமை நிர்வாகியான வண. ஓமல்பே சோபித தேரோவும், ஹங்குரங்கெத்தவிலுள்ள மற்றொரு விகாரையும் இனந்தெரியாத குழுக்களினால் தாக்கப்பட்டன.

ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இவர்கள் சபாநாயகர் தெரிவில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருக்கு வாக்களித்தமையே இதற்குக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆளும்கட்சி-ஹெல உறுமய முறுகல்; அரசின் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து!

## கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு

(கொழும்பு)

**கடந்த வாரம் சபாநாயகர் தெரிவின்போது ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்குகள் இருவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்ததைத் தொடர்ந்து ஆளும் கட்சியினர் மற்றும் ஜே.வி.பியினரால் ஜாதிக ஹெல உறுமயவினர் அச்சுறுத்தப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.**

**இந்தக் குற்றச்சாட்டுக்களை அடுத்து ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்தவர்களுக்கும் ஜே.வி.பி மற்றும் சில அமைச்சர்கள் இடையே நேரடியான கருத்துமோதல்கள் உருவெடுத்திருப்பதால் இதுபெரும் வன்முறையாக மாறக் கூடிய சூழல் ஏற்பட்டுவருவதுடன் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் பெரும் அச்சுறுத்தல் எழுந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

இதைக் கருத்திற்கொண்டே ஜாதிக ஹெல உறுமயவினருக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பணித்திருக்கிறார்.

எனினும் இரு தரப்புக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் வலுவடைந்து வருவதால் அரசியல் அரங்கில் ஸ்திரமற்ற நிலை ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் இருப்பதாக கருதப்படுகிறது.

அரசியல் ஸ்திரமற்ற தன்மைகது இத்தகைய சம்பவங்கள் காரணமாக அமைந்துவிடும் எனக் கருதி அரசாங்கத் தரப்பு முக்கியஸ்தர்கள் சிலர் கண்டிப்பான உத்தரவுகளைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசாங்கத்தின் அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம்!

மாகாண, உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் பலாலி விமானப்படைத் தளத்தில் வந்திறங்கி நயினாதீவு நாகவிகாரைக்குச் சென்று புத்தபகவானை தரிசித்துவிட்டு, மதியம் யாழ்நகரப் பகுதிக்கு வந்த அமைச்சர், யாழ். பஸ் நிலையத்துக்கு பின்புறமாகவுள்ள தனியார் பஸ் நிலையத்தில் நின்ற பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது அங்கு நின்ற மக்கள் அமைச்சரிடம் கருத்துத் தெரிவிக்கையில் -

நாம் ஓர் நிலையான சமாதானத்தையே விரும்புகின்றோம். எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ்வதற்கு தனிமனித உரிமைகள் வேண்டும். இனிவரும் காலங்களில் தமிழர்கள் நசுக்கப்படுவதும், அவர்கள் ஏமாற்றப்படுவதும் நிறுத்தப்படவேண்டும்.

தற்போது ஆட்சியில் அமர்ந்துள்ள அரசானது, தமிழ்மக்களுக்கோர் நிலையான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**இந்தக் குற்றச்சாட்டுக்களை அடுத்து ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்தவர்களுக்கும் ஜே.வி.பி மற்றும் சில அமைச்சர்கள் இடையே நேரடியான கருத்துமோதல்கள் உருவெடுத்திருப்பதால் இதுபெரும் வன்முறையாக மாறக்கூடிய சூழல் ஏற்பட்டுவருவதுடன் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் பெரும் அச்சுறுத்தல் எழுந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

இதைக் கருத்திற்கொண்டே ஜாதிக ஹெல உறுமயவினருக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பணித்திருக்கிறார்.

எனினும் இரு தரப்புக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் வலுவடைந்து வருவதால் அரசியல் அரங்கில் ஸ்திரமற்ற நிலை ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் இருப்பதாக கருதப்படுகிறது.

அரசியல் ஸ்திரமற்ற தன்மைககு இத்தகைய சம்பவங்கள் காரணமாக அமைந்துவிடும் எனக் கருதி அரசாங்கத் தரப்பு முக்கியஸ்தர்கள் சிலர் கண்டிப்பான உத்தரவுகளைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

தரிசித்துவிட்டு, மதியம் யாழ்நகரப் பகுதிக்கு வந்த அமைச்சர், யாழ். பஸ் நிலையத்துக்கு பின்புறமாகவுள்ள தனியார் பஸ் நிலையத்தில் நின்ற பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது அங்கு நின்ற மக்கள் அமைச்சரிடம் கருத்துத் தெரிவிக்கையில் -

நாம் ஓர் நிலையான சமாதானத்தையே விரும்புகின்றோம். எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ்வதற்கு தனிமனித உரிமைகள் வேண்டும். இனிவரும் காலங்களில் தமிழர்கள் நசுக்கப்படுவதும், அவர்கள் ஏமாற்றப்படுவதும் நிறுத்தப்படவேண்டும்.

தற்போது ஆட்சியில் அமர்ந்துள்ள அரசானது, தமிழ்மக்களுக்கோர் நிலையான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடமேல் மாகாணசபையை ஐ.ம.சு.மு. கைப்பற்றியது!

(கொழும்பு)

வடமேல் மாகாண சபைக்கு நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் 31 ஆசனங்களைக் கைப்பற்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றது.

52 உறுப்பினர்களைக் கொண்ட வடமேல் மாகாணசபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில் 31 ஆசனங்களைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைப் பிடித்தது. 19 ஆசனங்களைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சியும், இரண்டு ஆசனங்களை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கைப்பற்றின.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் சீனா - இந்தியாவுக்குப் பயணம்!

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் - சீனா, இந்தியா ஆகிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கொண்டிருக்கும் முதலாவது வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் இதுவாகும்.

முதற்கட்டமாக நேற்று சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்ற லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சர் லீ ஷாஓ ஷிங்குடன் இருதரப்பு உறவுகள் மற்றும் விவகாரங்கள் தொடர்பாக கதிர்காமர் பேச்சு நடத்துவார்.

இந்தப் பேச்சுக்களின்போது சீனா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மகாவலி அமைச்சிலுள்ள ஆயுதங்கள் ஜே.வி.பியினருக்கு செல்லும் ஆபத்து!

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பெருமளவு ஆயுதங்கள களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், மகாவலி அபிவிருத்தி அமைச்சை ஜே.வி.பிக்கு கொடுப்பதற்கு ஜனாதிபதி பின்னடிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் நடந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழுக் கூட்டத்தில் - ஆறுகள் அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கையில் -

ஜனாதிபதி சந்திரிகா மகாவலி அபிவிருத்தி அமைச்சு தொடர்பாக ஜே.வி.பியுடன் மிகவும் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மகாவலி அமைச்சு இழுபறி; நடக்கவிருந்த பேச்சு ரத்து!

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தி அமைச்சு தொடர்பான பிரச்சினை குறித்து ஆராயவதற்காக நேற்று நடைபெறவிருந்த கூட்டம் திடீரென ரத்துச்செய்யப்பட்டது.

ஜே.வி.பி முக்கியஸ்தர்களுக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் நேற்று மாலை நடைபெறவிருந்த கூட்டமே இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழுக்கூட்டம் இடம்பெற்றதனாலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற முடியாதுபோனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலை 6 மணியுடன் முடிவடைய

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# வடமேல் மாகாணசபை தேர்தல் முடிவுகள்

## குருநாகல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 362 084 | ~ 20 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 215 905 | ~ 12 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 24 173 | ~ 02 |

| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | - 604 979 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - 28 019 |
| மொத்த வாக்குகள் | - 632 998 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | - 1 113 758 |

### கல்கமுக தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 33 579 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 13 849 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 1 557 |
| செல்லுபடியான வாக்குகள் - | 49 139 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 2 925 |
| மொத்த வாக்குகள் - | 52 064 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 88 822 |

### ஹிரியால தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 21 759 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 14 030 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 1 647 |
| செல்லுபடியான வாக்குகள் - | 37 888 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 1 937 |
| மொத்த வாக்குகள் - | 39 825 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 83 535 |

### பிங்கிரிய தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 24 488 |
| ஐக்கிய மக்கள் முன்னணி | ~ 15 661 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 1 515 |
| செல்லுபடியான வாக்குகள் - | 41 851 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 1 560 |
| மொத்த வாக்குகள் - | 43 411 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 75 985 |

### தம்பதெனிய தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 27 472 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 16 386 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 750 |
| செல்லுபடியான வாக்குகள் - | 44 778 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 2 082 |
| மொத்த வாக்குகள் - | 46 860 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 83 250 |

### நிக்கவரெட்டிய தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 27 290 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 15 085 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 2 094 |
| செல்லுபடியான வாக்குகள் - | 44 624 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 2 247 |
| மொத்த வாக்குகள் - | 46 871 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 80 736 |

### வாரியப்பொல தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 22 884 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 13 585 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 469 |
| செல்லுபடியான வாக்குகள் - | 37 105 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 1 761 |
| மொத்த வாக்குகள் - | 38 866 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 65 847 |

### பொல்கஹவெல தேர்தல்பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 21 164 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 12 310 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 1 416 |
| செல்லுபடியான வாக்குகள் - | 35 062 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 1 491 |
| மொத்த வாக்குகள் - | 36 553 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 68 091 |

### தொடங்கஸ்லந்த தேர்தல்பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 20 258 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 11 555 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 2 737 |
| செல்லுபடியான வாக்குகள் - | 34 734 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 1 853 |
| மொத்த வாக்குகள் - | 36 587 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 61 727 |

### யாப்பகூவ தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 31 582 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 19 177 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 759 |
| செல்லுபடியான வாக்குகள் - | 51 666 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 3 012 |
| மொத்த வாக்குகள் - | 54 678 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 96 817 |

### குளியாப்பிட்டிய தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 27 985 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 17 366 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 3 931 |
| செல்லுபடியான வாக்குகள் - | 49 446 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 2 041 |
| மொத்த வாக்குகள் - | 51 487 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 86 416 |

### குருநாகல் தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 19 668 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 14 895 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 1 886 |
| செல்லுபடியான வாக்குகள் - | 36 096 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 1 518 |
| மொத்த வாக்குகள் - | 38 425 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 74 368 |

### கட்டுகம்பொல தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 27 398 |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 16 842 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | ~ 478 |
| செல்லுபடியான வாக்குகள் - | 44 886 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 1 905 |
| மொத்த வாக்குகள் - | 46 791 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 83 645 |

## புத்தளம் மாவட்டம்

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 128 916 ~ |
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 95 868 ~ |
| செல்லுபடியான வாக்குகள் | - 225 765 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - 9 600 |
| மொத்த வாக்குகள் | - 235 365 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | - 450 057 |

### புத்தளம் தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | ~ 24 073 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | ~ 20 918 |
| செல்லுபடியான வாக்குகள் - | 45 220 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 2 009 |
| மொத்த வாக்குகள் - | 47 229 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் - | 90 004 |

## சமாதான நீதிவான்களாக பதவியேற்றோர்



அல்வாய் வடக்கு மகாத்மா வீதியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை அருமைத்துரை அகில இலங்கை சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும், பருத்தித்துறைசாலை தேசிய ஊழியர் சங்கத் தலைவரும் ஆவார்.

தொண்டமனாறு வீரகத்தி மகாவித்தியாலய பழைய மாணவரான இவர் சிறந்த சமூகசேவையாளருமாவார். தற்போது இவர் பருத்தித்துறை வடபிராந்திய போக்குவரத்துச் சாலையில் சிரேஷ்ட பரிசோதகராகக் கடமை புரிகிறார்.



சிதம்பரப்பிள்ளை நல்லதம்பி தண்டாயுதபாணி அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிபதி நடேசகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். இவர் இராமநாதபுரம் கிராம அலுவலராகவும், கரைச்சி பிரதேசசெயலர் உப பணிமனை பொறுப்பலுவலராகவும் கடமையாற்றி வருகிறார். அத்துடன் வட்டக்கச்சி ஸ்ரீ ரெங்கநாதப் பெருமான் (கண்ணன் கோயில்) ஆலய பரிபாலனசபைத் தலைவருமாவார்.



இலவச மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்துள்ள அமெரிக்க மருத்துவக் குழுவினர் தமது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளததைப் படத்தில் காணலாம்.

## மாதாந்த நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வெண்மை வாணிபர் சங்கங்களின் ஒன்றிய மாதாந்த நிர்வாகசபைக் கூட்டம், யாழ்ப்பாணம் - அரசடி வீதியில் அமைந்துள்ள ஒன்றியத்தின் தலைமை செயலகத்தில் எதிர்வ ம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

ஒன்றிய தலைவர் இ.பால்ராஜ் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு அனைத்து பிரதேச வெண்மை வாணிபர் சங்க செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஒன்றியத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.


நிறஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், சூர்யா, லைலா நடித்த

பிதாமகன்

(சி-2386)

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)

Do not Disturp

ராஜா யாழ்ப்பாணம்.

இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த

கில்லி



காட்சி நேரம் : 10.30,2.30,6.30, 9.30 (பு.நே)

(சி-2387)






நெடுந்தீவிற்கு நேற்றுமுன்தினம் அரச அதிபர் தலைமையில் சென்ற அதிகாரிகள் குழு சிக்கியாம்பிள்ளை கலவன் பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், சுறாப்பிட்டி குடிநீர்த்திட்டத்தை அரச அதிபர் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (113)

## நிலையியல் கட்டளைகளில் திருத்தம் செய்ய வேண்டும்

### சபாநாயகர் லொக்குபண்டார

நாடாளுமன்றத்தின் பிறநிலையியல் கட்டளைகளில் குறைபாடுகள் இருக்கின்றன. இதனால், இவற்றினைத் திருத்தம் செய்ய வேண்டும். இவ்வாறு புதிய சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் உத்தியோகபூர்வமாகத் தமது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர், கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

சபாநாயகர் பதவியிலிருப்பவருக்குப் பாரிய பொறுப்பு இருக்கின்றது. ஒழுக்க சீலராகவும், நேர்மையானவராகவும், முன்மாதிரியானவராகவும் செயற்படவேண்டும்.

நிலையியற் கட்டளைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுமானால், அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரியாதை செலுத்தவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் சிரமமான காரியமாகாது.

எனினும், நிலையிற் கட்டளைகளில் குறைபாடுகள் இருப்பதால், காலத்திற்குக் காலம் திருத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

### ஜனாதிபதி சந்திரிகா

## நோர்வேக்கு விடுத்த அழைப்பை ஐக்கியதேசியக் கட்சி வரவேற்பு !

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நோர்வே அரசுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்புத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதற்காக, நோர்வே அரசுக்கு அழைப்பு விடுத்தமை குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒஸ்லோ பிரகடனத்தையும், கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட ரோககியோ பிரகடனத்தையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி கருதுகின்றது.

இவ்வாறான தமது கட்சியின் நிலைப்பாடுகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தெளிவுபடுத்தவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக நோர்வே நாடு மேற்கொண்ட உயர்ந்த ஒத்துழைப்பை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரின் கட்சியினரும் உணர்ந்துள்ளனர்.

எனவேதான், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கு அவர்கள் தமது ஆதரவை வழங்குகிறார்கள்.

இரண்டு வருடங்களாக நோர்வேயின் ஏற்பாட்டாளர் நிலையை விமர்சித்து வந்த ஜனாதிபதியும், அவரின் ஆலோசகர்களும் கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளனர்.

இது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டுடன் ஒப்பிடும்போது எந்தவிதமான வித்தியாசத்தையும் கொண்டிருக்கவில்லை.

இந்த நிலையில், கடந்த இரண்டாண்டு காலப்பகுதியில் நோர்வேயின் அனுசரணை நிலையை ஜனாதிபதி விமர்சித்தமையானது ஏற்றுக்கொள்ளமுடியாதது.

ரோக்கியோ பிரகடனத்தின் அடிப்டையிலேயே புதிய அரசாங்கம் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவேண்டும் எனவும் குறிபபிடப்பட்டுள்ளது. (01)

## வாக்களிக்கச் சென்ற தமிழர்களை ஐ.முன்னணி ஆதரவாளர்கள் தாக்கினர்

(கொழும்பு)

வடமேல் மாகாண தேர்தலில் வாக்களிக்கச் சென்ற தமிழ் மக்கள் 25 பேர்- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தோட்டக் கமிட்டித் தலைவர் முத்துமாரி, அவரது மனைவி உட்பட 20 மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

மாவத்தகம தேர்தல் தொகுதியில் நொட்டிக் கில்ட் என்ற இடத்தில் வைத்து இவர்கள் தாக்கப்பட்டனர்.

குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் தேர்தலில் வாக்களிக்கச்சென்ற மக்களை அச்சுறுத்தியதுடன், அவர்களை வாக்களிக்கச் செல்லவிடாது தடுத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்திலும் சில குழுக்கள் வாக்களிக்கச் சென்ற மக்களை அச்சுறுத்தியதுடன், வாக்களிக்கச் செல்லவிடாது திருப்பி அனுப்பப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கு பல்கலைக்கழக அசம்பாவிதங்களுக்கு பகிரங்கமாக மன்னிப்புக் கோரப்பட்டது!

கடந்த மாதம் மட்டக்களப்பு மாவட்டத்திலும், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்கு மன்னிப்புக்கோரியும், அது தொடர்பான கவலைகளைத் தெரிவித்தும் - நேற்றுமுன்தினம் கிழக்கு பல்கலைக்கழகத்தில் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் கலாநிதி ரவீந்திரநாத் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது - பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அருளானந்தன், ஒன்றியச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் கடந்த மாதம் மட்டக்களப்பில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது பல்கலைக்கழகத்திலிருந்து திருமலை மற்றும் வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டமைக்கும், அங்கு கடமையாற்றிய வெளிமாவட்டங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டமைக்கும்,

பல்கலைக்கழக சமூகம் என்ற தலைப்பில் கருணா குழுவினருக்கு சார்பாகத் துண்டுப்பிரசுரங்களை வெளியட்டமைக்காகவும், பல்கலைக்கழக விடுதிகளிலிருந்து வெளியேறிய வெளிமாவட்ட மாணவர்களின் அறைகளை உடைத்து, அவர்களுடைய பொருட்களுக்கு சேதம் விளைவித்தமைக்கும் - பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் சக மாணவர்களிடமும் பகிரங்க மன்னிப்பு கோரினர்.

இது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை பதில் துணைவேந்தர் தலைமையில் முன்னாள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்களுக்கும், தற்போது பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்த மாணவர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றபோதிலும், முடிவுகள் எதுவும் எடுக்கப்படாமலேயே அந்தக் கூட்டம் முடிவடைந்தது.

இதனையடுத்து, நேற்றுமுன்தினம் காலை பல்கலைக்கழக ஆலோசகராகக் கடமையாற்றும் வண.பிதா சுவாமிநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றபோது, அங்கு மாணவர் ஒன்றியத்தின் சார்பில் பகிரங்க மன்னிப்பு கேட்பதென முடிவெடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் மாலை பல்கலைக்கழக கேட்போர்கூடத்தில் - உபவேந்தர், விரிவுரையாளர்கள், செனட்சபை அங்கத்தவர்கள், ஆலோசகர் மற்றும் பல்கலைக்கழக சகல தரப்பினரும் கூடினர். இதன்போது மாணவர் ஒன்றியத் தலைவர் அருளானந்தன் மற்றும் ஒன்றியச் செயலாளர், பொருளாளர் மூவரும் சமுகமளித்து பல்கலைக்கழக சமூகத்திடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

இதன்பின்னர் தற்போது - கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்துள்ள அசாதாரணமானநிலை நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய வெளிமாவட்ட மாணவர்கள் முழுமையாக இன்னமும் வந்துசேரவில்லையெனவும், மன்னிப்புக்கோரப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்கள் வந்து தமது கல்வியை மீளத் தொடரமுடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை - இதுநாள்வரை கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமென அருளானந்தன் தலைமையில் செயற்பட்டுவந்த குழு, கலைக்கப்பட்டிருப்பதாகவும், தற்போது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமென எதுவும் இல்லையெனவும், வெகுவிரைவில் மாணவர்கள் அனைவரையும் கூட்டி அவர்கள் மத்தியிலிருந்து புதிய மாணவர் ஒன்றியம் உருவாக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10)

### ஜே.வி.பியினர்

## ஹெல உறுமயவின் ஆதரவை பெற்றுக்கொடுத்தமைக்கு நன்றி!

### புதிய சபாநாயகர் தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவின்போது ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற்றுக்கொடுத்தமைக்காக ஜே.வி.பியினருக்கு நன்றி தெரிவிப்பதாகச் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்தார். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்றுமுன்தினம் கண்டி தலதா மாளிகைக்குச் சென்ற புதிய சபாநாயகர் - அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரர், 13 ஆவது நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவின்போது இடம்பெற்ற இழிவான சம்பவங்கள் தொடர்பில் கவலையடைவதாகக் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க இங்கு கருத்து வெளியிடுகையில் - பெரும்பான்மை பலம் கொண்ட எதிர்க்கட்சி நாடாளுமன்றத்தில் இருப்பதால், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும்போது எதிர்க்கட்சிகளின் கருத்துக்களையும் அரசாங்கம் பெற்றுக்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தார்.

## வர்த்தமானி வெளியிடப்படாததால் அமைச்சர்கள் நெருக்கடியில்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்று மூன்று வாரங்களாகி விட்டபோதும், அமைச்சர்களின் பொறுப்புக்கள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் இன்னமும் வெளியிடப்படவில்லை.

இதன் காரணமாக, அமைச்சர்கள் தமது கடமைகள் சம்பந்தமாகத் தெளிவான தகவல்களை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அமைச்சர்களின் பொறுப்புக்கள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதாக இருந்தது. எனினும், நேற்றுமுன்தினம் இரவுவரை அது தொடர்பில் எவ்வித ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தநிலையில் - இன்று இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (01)

## கேணல் ரமேஷ் குழுவினர் மட்டக்களப்பு திரும்பினர் !

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் தலைமையிலான 13 போராளிகள் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்குத் திரும்பினர்.

விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடல் நடத்துவதற்காகக் கடநத 20 ஆம் திகதி கிளிநொச்சிக்குச் சென்ற கேணல் ரமேஷ் தலைமையிலான குழுவினரே, கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்குத் திரும்பினர்.

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியிலிருந்து - யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வழித்துணையுடனும், இராணுவ கவச வாகனங்களினதும் பாதுகாப்புடன் இவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அழைத்து வரப்பட்டதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் மட்டக்களப்பு திரும்பிய இவர்கள், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்றுள்ளதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிர்வாகக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலான திட்டங்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடவே கேணல் ரமேஷ் தலைமையிலான குழுவினர் அங்கு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தல் பணியின்போது பொலிஸ்காரர் மரணம்!

(கொழும்பு)

வடமேல் மாகாண தேர்தல் கடமையில் ஈடுபட்ட வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த பொலிஸ் கொனஸ்டபிள் ஒருவர் உயிரிழந்ததுடன் நான்குபேர் வரை காயமடைந்தார்.

வாக்களிப்பு முடிந்ததும் கல்கமுவ தேர்தல் தொகுதியிலிருந்து, குருநாகல் மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள வாக்கு எண்ணும் நிலையத்திற்கு வாக்குப்பெட்டி ஏற்றிச் சென்ற ஹைஏஸ் வாகனமே விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் மாகோ பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய எ.எஸ்.சிறி அதிகாரம் என்ற கொன்ஸ்டபிள் உயிரிழந்ததுடன், வெல்லாவெளிப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் சரத்சந்திர, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாக்குப்பெட்டியை ஏற்றிவந்த ஹைஏஸ் வாகனம் வேகமாக வந்துகொண்டிருந்த வேளை, மழை பெய்துகொண்டிருந்தமையால் வாகனம் பாதையைவிட்டு விலகியதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

வடமேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் அசோகரத்தினவீரவின் பணிப்பின் பேரில் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி நிமால் ரோவன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றார்.

## கட்சி ஒழுங்கை மீறியதாக இரு பிரமுகர்களை நீக்க முடிவு

### ஜாதிக ஹெல உறுமய நடவடிக்கை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஹெல உறமய கட்சியின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒழுங்காற்று நடவடிக்கைமூலம் கட்சியிலிருந்து நீக்கவுள்ளதாக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி மேலும் தெரிவித்ததாவது -

இரு நாடாளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குகளில் ஒருவருக்கெதிராக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் ஒழுங்குகளை மீறிய இந்த இரு பௌத்த பிக்குகளால், கட்சிக்கு கெட்டபெயர் ஏற்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வண.அப்பராகே பஞ்ஞானந்த தேரோ மற்றும் கொழும்பு மாவட்டத்தில் வெற்றி பெற்ற கட்டொலுவே ரத்னசிறி தேரோ ஆகிய இருவரையுமே ஹெல உறுமய கட்சியிலிருந்து நீக்கமுடிவுசெய்துள்ளது.

# 35 ஓட்டங்களுக்குள் சிம்பாப்வேயைச் சுருட்டி 9 விக்கெட்டுக்களால் இலங்கை வென்றது!

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் உலகில் குறைந்த ஓட்டங்களுக்குள் சிம்பாவேயைத் தோற்கடித்து இலங்கை அணி 9 விக்கெட்டுக் களால் மூன்றாவது ஒருநாள் போட்டியையும் வென்றுள்ளது.

ஹராரேயில் நேற்று நடந்த 3 ஆவது ஒரு நாள போட்டியில் நாணயச் சுழற்சியில வென்ற இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மா னித்தது.

இதனால், சிம்பாப்வே அணி துடுப்பெடுத் தாடியது. அந்த அணி சார்பாக எவரையும் நிலைத்து நின்று ஆட இலங்கை அணியின் பந்து வீச்சாளார்கள் விடவில்லை.

சிம்பாப்வே அணி சார்பாக இப்ராஹிம் மட்டுமே கூடுதலாக 7 ஓட்டங்களைப் பெற்றார். நான்கு வீரர்கள் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். சிம்பாவே அணி வீரர்கள் எவரும். இரட்டை இலக்க ஓட்டங்களை பெற வில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது. இறுதி யில் சிம்பாப்வே 18 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்க ளைப் பெற்றது.

பந்துவீச்சில் சமிந்தவாஸ் 4, ம.்.றூப் 3, பெர்ணாண்டோ 2 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர். நேற்றைய போட்டியில் சமிந்தவாஸ் தனது 300 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றி னார்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9.2 ஓவரில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

நேற்றைய போட்டியில் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களாக ஆர்னல்ட்டும், ஜெயந்தவும் களமிறங்கினார். இதில் ஆர்னல்ட் 6 ஓட்டங் களுடன் ஆட்டமிழக்க ஜெயந்த 28, ஜெய வர்த்தன 3 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வெற்றியிலக்கை இலங்கை அணி அடைந்தது.

பந்துவீச்சில் ஹொன்டோ மட்டும் ஆர் னல்ட்டின் விக்கெட்டைக் கைப்பற்றினார்.

2003 ஆம் ஆண்டு நடந்த உலக கிண் ணப் போட்டியில் கனடாவை 36 ஓட்டங்களுக் கும், 2001 - 2002 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த போட்டியில் 38 ஓட்டங்களுக்குள் சிம் பாப்வேயையும் இலங்கை தோற்கடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## முடிளிதரனின் பந்துவீச்சு முறை

# அவுஸ்ரேலிய பல்கலைக்கழக அறிக்கை சர்வதேச கிரிக்கெட் சபையிடம்!

இலங்கையின் வலதுகை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் டூஸ்ரா பந்துவீச்சு முறை தொடர்பாக மேற்கு அவுஸ்ரேலிய பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையை இலங்கை கிரிக்கெட் சபைக்கு அனுப்பியுள்ளது.

முரளிதரன் ஓப் பிரேக் முறையில் டூஸ்ரா பந்துவீசும்போது அது துடுப்பாட்ட வீரரின் மாறுபட்ட திசைக்கு செல்வதாகக் கூறப்படுகிறது.

இது கிரிக்கெட் முறைக்கு எதிரானது எனக் கூறி அவுஸ்ரேலிய அணியின் கடந்த மாத சுற்றுலாவின்போது, கிரிக்கெட் நடுவராக செயற்பட்ட கிரிஸ் போட் சர்வதேச கிரிக்கெட் சபைக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து உடனடியாகவே முரளிதரன் அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து மேற்கு அவுஸ்ரேலியப் பல்கலைக்கழகம் அது தொடர்பாக அறிக்கை ஒன்றை இலங்கை கிரிக்கெட் சபைக்கு அனுப்பியிருந்தது.

இது உத்தியோகபூர்வமாக வெளியிடப்படாதபோதும், அதில் முரளிதரனின் இயற்கை யான முன் கைப்பகுதி காரணமாக அவருக்கு 10 பாகையளவில் கையை உயர்த்தியே பந்து வீச்சை மேற்கொள்ளமுடிகிறது.

எனவேதான் டூஸ்ரா பந்துவீச்சு முறையில் அவரின் பந்து திசைமாறிச் செல்வதாக குறிப் பிடப்பட்டிருந்ததாக நம்பப்படுகிறது. இந்த சூழ்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட கருத்தின்படி முரளிதரனின் டூஸ்ரா பந்து வீச்சு முறை தொடர்பாக மீண்டும் 12 மாதங்களுக்குள் முறைப்பாடு தெரிவிக்கப்படுமானால், அவர் ஒரு வருட போட்டி தடைக்கு உள்ளாக வேண்டிவரும் என எச்சரிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்தே, இலங்கை கிரிக்கெட் சபை அவுஸ்ரேலிய பல்கலைக்கழக அறிக்கையை சர்வதேச கிரிக்கெட் சபைக்கு அனுப்பியுள்ளது. கிரிக்கெட் ஒழுங்கின்படி வேகப் பந்து வீச் சாளர் ஒருவர் 10 பாகை அளவில் கையை உயர்த்தி பந்துவீச்சை மேற்கொள்ள முடியும்.

மத்திய வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் ஏழரை பாகை அளவிலேயே கையை உயர்த்தி தமது பந்துவீச்சை மேற்கொள்ள முடியும். அதேநேரம் சுழல் பந்து வீச்சாளர் ஒருவருக்கு 5 பாகை அளவிலேயே கையை உயர்த்தி பந்து வீச அனுமதிக்கப்பட்டுள்ளது. (01)

# இந்தியா வெல்லும் எனத் தெரிந்திருந்தால் சச்சினை தொடர்ந்து விளையாட விட்டிருப்பேன்

## ராகுல் ராவிட் பேட்டி

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் இந்திய அணி 4 நாட்களுக்குள் வெற்றிபெறும் என்று தெரிந்திருந்தால் டெண் டுல்கரை இரட்டைச்சதம் அடிக்க அனுமதித்தி ருப்பேன் என்று ராவிட் கூறியுள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடை யேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் முல் தானில் நடந்த முதல்டெஸ்டில் இந்தியா இன் னிங்ஸ் மற்றும் 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 4 ஆவது நாள் ஆட்டம் முடிவிலேயே இந்தியா இந்த வெற்றியைப் பெற்றது.

இந்த டெஸ்டின் 2 ஆவது நாளில் முதல் இன்னிங்சில் இந்தியா 5 விக்கெட் இழப்புக்கு 675 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. அப்போது சச்சின் டெண்டுல்கர் 194 ஓட்டங்க ளுடன் களத்தில் இருந்தார்.

டெண்டுல்கர் இரட்டைச்சதத்தை எட்ட 6 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் அந்தப் போட்டியில் கப்டனாக இருந்த ராவிட் டிக் ளேர் முடிவை எடுத்தது பெருத்த சர்ச்சை யைக் கிளப்பியது. இது பல்வேறு தரப்பிலும் விவாதத்துக்குரிய விஷயமானது. டிக்ளேர் முடிவு ஏமாற்றம் அளிப்பதாக டெண்டுல்கர் வெளிப்படையாக அதிருப்தி தெரிவித்து இருந் தார்.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரை வென்ற இந்திய அணிக்கு சாம்சங் நிறுவனம் சார்பில் பாராட்டு விழா டெல்கியில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் கலந்துகொண்ட துணைக் கப்டன் ராவிட்டிடம் சர்ச்சைக்குரிய டிக்ளேர் முடிவு பற்றிக் கேட்கப்பட்டது - அதற்கு அவர் கூறிய தாவது -

பாகிஸ்தானுக்கு எதிராக முல்தானில் நடந்த முதல்டெஸ்டில் நமது அணி 4 நாட்க ளுக்குள் வெற்றிபெறும் என்பது எனக்கு தெரிந்தி ருந்தால் சர்ச்சைக்குரிய அந்த டிக்ளேர் முடிவை எடுத்திருக்கமாட்டேன். டெண்டுல் கர் இரட்டைச்சதம் அடிக்க வழிவிட்டு இருப் பேன்.

இது அணியில் பெரிய பிரச்சினை அல்ல. நானும் டெணடுல்கரும் பேசித்தீர்த்துவிட்டோம். இருவரும் ஒருவருக்கொருவர் அதிகமதிப்பு வைத்திருக்கிறோம்.

கடந்த 2 ஆண்டுகளாக இந்தியஅணியில் வீரர்கள் இணைந்து ஆடும் முறையில் வளர்சசி பெற்று இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு நாள் அணிக்கு நிரந்தர விக்கெட் கீப்பர் தேவை. பட்டேல் நன்றாக கீப்பிங் செய்கிறார். பாகிஸ் தான் பயணத்தில் சிறப்பாகச் செயல்ட்டார்.

பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றி மிக சிறப்பான ஒன்றாகும். அடிலெய்ட் டெஸ்ட்



வெற்றி தான் மிகச்சிறந்தது என்று கப்டன் கங்கூலி கூறி இருப்பது அவரது கருத்து. ஒவ்வொரு வீரருக்கும் தனிப்பட்ட கருத்தும் வேறுபாடான சிந்தனையும் இருக்கும் இவ் வாறு ராவிட் கூறினார்.

டெல்கியில் நடந்த. இந்தப் பாராட்டுவிழாவில் கும்ளே, பதான், முகமது கை.்.வ், பார்த்தீவ் பட்டேல், ஹர்பஜன்சிங், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## விளையாட்டு

### மேற்கியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளின் இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது!

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணி களுக்கிடையில் றினிடாட்டில் நேற்று நடந்த இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப் பெடுத்தாடியது. 16 ஓவர்கள் வீசப்பட்ட நிலை யில் 2 விக்கெட்டுக்களை இழந்து 57 ஓட்டங் களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக் கிட்டதனால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

ஒரு மணி நேரத்தின்பின்னர் ஆட்டம் ஆரம் பமான போதும் மீளவும் மழை வந்ததனால் ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக கைல் 20, சந்திரபோல் 3 ஓட்டங்களை பெற்றநிலை யில் ஆட்டமிழந்தனர். பவல் 8, சர்வான் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ஜேம்ஸ் அன்டர்சன் தனது முதலாவது சர்வதேசப் போட்டியில் முதலா வது ஓவரிலேயே கைலின் விக்கெட்டை வீழ்த் தினார். ஹர்மிசனும் ஒரு விக்கெட்டை கைப் பற்றினார்.

காயம் காரணமாக முதல் போட்டியில் விளையாடாமல் இருந்த மேற்கிந்தியத் தீவு கள் அணித்தலைவர் லாரா நேற்றைய இரண் டாவது போட்டியில் அணிக்கு தலைமை தாங் கினார்.

# காங்கிரஸுக்கு பெரும்பான்மை கிடைத்தால் சோனியா காந்திதான் பிரதமராவார்!

தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் பா்ன்மை கிடைத்தால் சோனியா தான் பிரதமர் என்று கட்சி மேலிடம் திட்டவட்டமாக அறிவித் திருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர் பாளர் அபிஷேக் சிங்வி டெல்கியில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது, காங்கிஸ் கூட்டணியில் ராஷ்டிரீய ஜனதா தள தலைவர் லல்லு பிரசாத் யாதவ் பிரதமர் பதவிக்கு உரிமை கோருவதால், யார் பிரதமர் என்று பா.ஜனதா கேள்வி எழுப் பியது பற்றி கேட்கப்பட்டது. அதற்குப் பதில் அளித்து அபிஷேக் சிங்வி கூறியதாவது -

தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு தனிப் பெரும்பான்மைப் பலம் கிடைத்தால், சோனியா தான் பிரதமர். அதில் எந்த மாற்றமும் இலலை. அப்படிப் பெரும்பான்மைப் பலம் கிடைக்க வில்லையென்றால் கூட்டணி ஆட்சித் தலை வர்கள் கூடி பிரதமர் யார் என்பதை முடிவு செய்வார்கள்.

இவ்வாறு அபிஷேக் சிங்வி கூறினார்.

காங்கிரஸுக்கு பெரும்பான்மை கிடைததால், சோனியாதான் பிரதமர் என்ற கருத்தை கட்சி யின் மூத்த தலைவர்களான மன்மோகன் சிங், ஆஸ்கர் பெர்ணான்டஸ் ஆகியோர் ஏற் கனவே அறிவித்துள்ளனர்.

# ஜோர்ஜ் பெர்னாண்டஸ் வாக்காளரைக் குழப்புகிறார்

## சமாஜ்வாடி கட்சி குற்றச்சாட்டு

(லக்னோ)

ஜோர்ஜ் பெர்னாண்டஸ் வாக்காளர்களைக் குழப்பப்பார்க்கிறார். தேசிய ஜனநாயகக் கூட் டணியில் ஒருபோதும் சேரமாட்டோம் என்று முலாயங் சிங் யாதவ் கட்சி உறுதியளித்துள் ளது.

முலாயங் சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாடி கட்சி உத்தரப் பிரதேச மாநிலத் தில் தனித்துப் போட்டியிடுகிறது. இந்தக்கட்சி யின் பொதுச்செயலாளர் அமர்சிங் நிருபர் களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது-

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சமாஜ் வாடிக்கட்சி இணைந்துவிடும் என்று ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பேசிவருகிறார்.

ஜோர்ஜ் பெர்னாண்டஸிடம் சமாஜ் வாடிக் கட்சித்தலைவர் முலாயங் சிங் யாதவ் நண் பர்கள்தான் இருவருமே ராம் மனோகர் லோகி யாவை முன்பு பின்பற்றியவர்கள்தான்.

ஆனால், தற்போது ஜோர்ஜ் பெர்னாணடஸ் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைப் பாளராக இருக்கிறார். இரு தலைவர்களின் கொள்கை கோட்பாடுகள் முற்றிலும் வேறுபடு கிறது. சமாஜ்வாடிக் கட்சி ஒரு போதும் மத வாதக் கட்சியுடன் கூட்டணி சேராது. கொளகை யில் ஒருபோதும் நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணித்தலைவர்க ளுக்கு தோல்விப்பயம் வந்துவிட்டது. இத னால் மக்களைக் குழப்பப்பார்கிறார்கள். மேலும் சமாஜ்வாடிக் கட்சியின் புகழைக்கெடுப்பதற் காக இப்படிப் பேசி வருகிறார்கள்.

அவர்களது இவ்வித பேச்சு விரக்தியைத் தான் வெளிப்படுத்துகிறது. இந்த நேரத்தில் மட்டுமல்ல, எந்த நேரத்திலும் தேசிய ஜன நாயக் கூட்டணியுடன் கைகோர்க்க மாட் டோம்.

ஜோர்ஜ பெர்னாணடஸ், ஆர்.எஸ்.எஸ் என்ன சொல்கிறதோ அதைத்தான் செய்துவரு கிறார். பிரதமர் வாஜ்பாயும்கூட குழப்பமான அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். பெர் ணான்டஸ்சைப் போலவே அவரும் சமாஜவாடி கட்சியைப் பற்றிப் பேசியுள்ளார். வாக்காளர்க ளைக் குழப்பும் நோக்கத்தில்தான் இப்படி யெல்லாம் பேசுகிறார்கள். இவ்வாறு அமர் சிங் கூறினார்.

# தமிழக தேர்தல் களத்தில் 619 வேட்பாளர்கள்!

தமிழகத்தில் 39 தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 127 மனுக் கள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. இதைய டுத்து 619 வேட்பாளர்கள் மட்டுமே இப்போது களத்தில் உள்ளனர்.

வரும் மே 10 ஆம் திகதி நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற் காக தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்பு மனுக் கள் நேற்றுமுன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதில், முறையாக தாக்கல் செய்யப்படாத மனுக்கள், போதிய ஆவணங்கள் வைக்கப்படாத மனுக்கள், கட்டுப்பணம் செலுத்தப்படாத மனுக் கள் ஆகியவை நிராகரிக்கப்பட்டன. மொத்தம் 127 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதில் பெரும்பான்மையானவை சுயேட்சைகளின் மனுக்களே.

இதையடுத்து, 619 வேட்பாளர்களின் மனுக் கள் போட்டிக்குத் தகுதியானவையாக அறி விக்கப்பட்டுள்ளன.

முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் அனை வரின் வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டுள்ளன.

போட்டியில் இருந்து விலக விரும்புவோர் நாளைக்குள் வேட்பு மனுக்களை வாபஸ் பெற றுக்கொள்ளலாம். அதன் பிறகு இறுதி வேட் பாளர் பட்டியல் வெளியாகும்.

# சட்டவிரோத மண்ணகழ்வை தடுக்காவிட்டால் மாற்றுவழியில் போராடத் தயாராகவுள்ளோம்

## மண்ணகழ்வைத் தடுப்பது குறித்த கூட்டத்தல் கிராம அலுவலர் சி.கனகரத்தினம்

(மட்டுவில்)

சட்டவிரோதமாக எம்மண்ணில் இடம்பெற்றுவரும் மண்ணகழ்வு மற்றும் கசிப்பு உற்பத்தி, விற்பனை, உபயோகம் என்பவற்றினால் தமது வாழ்வும் வளமும் வீணடிக்கப்படுவதோடு, எதிர்கால சந்ததியினரது வாழ்வும் வீணடிக்கப்படுகின்றது. உண்ண உணவையும் வருமானத்தையும் தேடித்தரும் வயல் நிலங்களில் கடல்நீர் புகுந்து தருசு நிலங்களாக மாறும் அபாயம் சட்டவிரோத மண்ணகழ்வினால் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மட்டுவில் வடக்கு மற்றும் கிழக்கு விவசாய சம்மேளங்களின் ஏற்பாட்டினால் மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலத்தில் இடம்பெற்ற சட்டவிரோத மண்ணகழ்வைத் தடுப்பது சம்பந்தமான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிய மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் சி.கனகரத்தினம் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மட்டுவில் கிழக்கு விவசாய சம்மேளனத்தலைவர் சு.க.சண்முகசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மட்டுவில் பகுதியில் சட்டவிரோதமாக மண்ணகழ்வு இடம்பெறும் இடங்களையும் அதன் மூலம் கடல் நீர் வயல்நிலங்களுக்குள் செல்லக்கூடும் என எதிர்பாக்கப்படும் பாதையையும், பாதிக்கப்படும் எனக் கருதும் வயல்நிலங்களையும் வரைபடம் மூலம் சி.கனகரத்தினம் விளக்கினார்.

இந்தச் சட்டவிரோத மண்ணகழ்வினை நாம் தடுக்க நடவடிக்கை எடுக்காதுவிட்டால், இந்தப்பகுதியிலுள்ள சுமார் 150 ஏக்கர் வயல் நிலங்கள் நெற்செய்கைக்கு உதவாத உவர் நிலங்களாகிவிடும். இதன் மூலம் எமக்கு மட்டுமன்றி எமது சந்ததிக்கும் துரோகம் இழைத்தவர்களாகக் கருதப்படுவோம்.

இதனைத்தடுப்பதற்கு என்ன செய்யலாம் எனக் கூட்டத்தில் கலந்துகொண்ட நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்களிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டன. இறுதியில் இது சம்பந்தமாக இந்தப்பகுதிப் பொதுமக்கள் அனைவரும் கையெழுத்திட்டு- தென்மராட்சி பிரதேச செயலர், யாழ். அரச அதிபர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் மற்றும் சாவகச்சேரி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி, நீதிவான் ஆகியோருக்கு கடிதம் அனுப்படவுள்ளதெனறும், இதற்கும் கட்டுப்படுத்தப்படாது விட்டால் மாற்றுவழிபற்றி ஆராயவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

அத்தோடு இடம்பெற்றுவரும் சட்டவிரோத மது உற்பத்தி, விற்பனை சம்பந்தமாகவும் கிராம அலுவலர் மக்களை விழிப்புணர்வுடன் செயற்படுமாறு கோரினர். சந்ததியையே நாசம் செய்யும் இத்தகைய ஒருசிலரது செயலுக்குத் துணைபோகவேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து 775 ஆம் இலக்க சங்கானை - சாவகச்சேரி பஸ் சேவை தொடர்பாகவும், மட்டுவில் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கான மின்விநியோகம் தாமதமாவது சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. இது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொள்வதென்றும் மிகவிரைவில் சாதகமான தீர்வு கிடைக்காவிட்டால் மாற்றுவழியில் போராடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. (24)



யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பொதுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் உரையாற்றுவதையும், மேடையில் சிறப்பு விருந்தினர்களாக அமர்ந்து இருப்பதையும் படத்தில் காணலாம்.

# கடலுணவுச் சந்தை அமைக்க உலக உணவுஸ்தாபனம் நிதியுதவி

(ஆழியவளை)

யாழ்ப்பாணத்தில் கடலுணவுச் சந்தை அமைப்பதற்கு உலக உணவு ஸ்தாபனம் ஒருகோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தச் சந்தையில் நவீன ஏற்றுமதி வசதிகள் கொண்ட சர்வதேச தரத்தில் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தை அமைப்பதற்கான பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சந்தைகளின் சமாசம் ஈடுபட்டு வருகின்றது.

யாழ்பாணத்தில் கடலுணவுச் சந்தை ஒன்றை அமைப்பதற்கு நிதி உதவி செய்து தரும்படி - தொண்டர் அமைப்புக்களிடம் கடற்தொழில் சமாசம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே உலக உணவுஸ்தாபனம் மேற்படி நிதியை ஒதுக்கியது.

இப்படிப்பட்ட சந்தை வசதி இன்மையின் காரணமாக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்கள் தாம் பிடிக்கும் கடலுவுகளைச் சந்தைப்படுத்தி உரிய இலாபத்தினைப் பெறமுடியாமல் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

# மல்லாவி வைத்தியசாலையில் மருந்துக்குத் தட்டுப்பாடு

வன்னிப் பிரதேசத்தில் உள்ள மல்லாவி மருத்துவமனையில் மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் விசர் நாய்க்கடியினாலும், பாம்புக்கடியினாலும் பாதிக்கப்பட்டு வருவோர் தொகை அதிகரித்து வருவதனால், இதற்கான மருந்துகள் இன்றி நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக வெளி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மேற்படி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படவேண்டிய காலாண்டு மருந்துகள் இன்னமும் அனுப்பி வைக்கப்படாமையால், ஏனைய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (122)

# சைக்கிள், மாட்டுவண்டிகளுக்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்

## நெடுந்தீவு பிரதேசசபை அறிவிப்பு

நெடுந்தீவு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள துவிச்சக்கரவண்டிகள், இரட்டை மாட்டு வண்டிகளுக்கான 2004 ஆம் ஆண்டுக்குரிய உரிமங்களைக் கட்டத்தவறியவர்கள் உடனடியாகப் பணம் செலுத்தி பற்றுச்சீட்டையும், உரிமத்தையும் பெற்றுக்கெள்ளுமாறு பிரதேசபை செயலாளர் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைச் சுமார் 500 பேர் பெற்றிருந்தபோதும், இந்தவருடம் குறித்த திகதிக்குள் சுமார் 100 பேர்வரையிலேயே உரிமங்களைப் பெற்றுள்ளதாகவும் பிரதேசபை வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

மேலும் உரிமங்களைச் செலுத்தாத வாகனங்கள் பிரதேசசபையினரால் பரிசோதிக்கப்பட்டு, கட்டணம் செலுத்த வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)









கொமர்ஷல் வங்கியின் அருணுலு கணக்குத் திட்டத்தில் இணைந்து கொண்டவர்களில் இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை ரீதியில் கூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டோரை மேலேயுள்ள படத்திலும், தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியிலிருந்து கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த நாகவதனிக்குப் பரிசு வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### சைக்கிள் திருட்டு

மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் சைக்கிளை நிறுத்திவிட்டு, வழிபடச்சென்ற சமயம் சைக்கிள் திருட்டுப்போன சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது- கடந்த செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5 மணிக்கு ஆலய முன்றலில் சைக்கிளை வைத்துவிட்டு வழிபடச் சென்றுவிட்டுத் திரும்பியபோதே சைக்கிள் திருடப்பட்டது தெரியவந்துள்ளது. மீசாலை கிழக்கைச் சேர்ந்த நவரத்தினம் இராசம்மா என்பவரின் சைக்கிளே திருடப்பட்டுள்ளது.(25)

### பரஞ்சோதி வித்தியாலயத்தில் திறந்தவெளி அரங்கு

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் புதிதாகத் திறந்த வெளி அரங்கு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. நீண்டகாலம் குறைபாடாக இருந்து வந்த அரங்குத் தேவையினைப் பாடசாலையின் பழைய மாணவன் சு.துரைராசா ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினரால் சுமார் 3 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. இந்த அரங்குத் திறப்புவிழா வெகுவிரைவில் நிகழவுள்ளது. (101)

### தேர்தல் கடமைகளில் ஈடுபட்டோருக்கு கொடுப்பனவு

தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கான கொடுப்பனவைப் பெறுவதற்குரிய வவுச்சர்கள் தற்போது வடமராட்சி கல்வித் திணைக்களத்தினால் விநியோகிக்கபட்டு வருகின்றன.

எனவே தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் காலம் தாழ்த்தாது உரிய வவுச்சர் படிவங்களைக் கல்வித் திணைகளத்தில் பெற்றுக்கொடுப்பனவைப் பெறுமாறு கேட்டப்பட்டுள்ளனர். (122)

### வைத்தியர்கள் தாதியர்கள் பற்றாக்குறை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிகள் வெற்றிடங்கள் 1400 இற்கு மேற்பட்டவை காணப்படுவதாகவும், இதில் தாதியர் வெற்றிடங்கள் மாத்திரம் 954 காணப்படுவதாக வடக்கு - கிழக்கு மாகாணசபை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தவகையில் 128 வைத்திய நிபுணர்கள், 247 வைத்தியர்கள், 65 பல் மருத்துவர்கள், 36 சுகாதார வைத்திய அதிகாரிகள், 954 தாதியர்கள் ஆகியோர் இன்னமும் நிரப்பப்படாமல் வெற்றிடமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (122)

### நெடுந்தீவு கிழக்கிற்கு பவுசர் மூலம் குடிநீர்

நெடுந்தீவில் குழாய் மூலம் குடிநீர்விநியோகம் செய்யப்படாத நெடுந்தவு கிழக்குப்பகுதிக்கு, இந்தமாதம் முதல் நெடுந்தீவு பிரதேசசபையினரால் பவுசர்மூலம், குடிநீர் அங்குள்ள தொட்டிகளுக்கு நிரப்பப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. கடந்த பல காலமாக அந்தப்பகுதி மக்கள் மிக நீண்ட தூரம் சென்றே குடிநீரைப் பெற்று வந்தனர். தற்போது தங்களுக்குக் குடிநீர் பிரச்சினை தீர்ந்துள்ளதாகவும், இந்தச் சேவை சீராக நடைபெற வேண்டும் எனவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (113)

### மிதிவெடி அகற்றும் பணி மீண்டும் ஆரம்பம்

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்கும் கல்வயல் சிவன் கோவிலுக்கும் இடைப்பட்ட முகுறிப் பகுதியில் மிதி வெடியகற்றும பணி "ஹலோ ட்ரஸ்ட்" நிறுவனத்தால் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட இந்தப் பணி மீளவும் தற்போது கனரக வாகனங்களின் உதவியுடன் நடைபெற்று வருகின்றமை [illegible]றிப்பிடத்தக்கது.(24)

### அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

(மீசாலை)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தங்களது அனுமதி அட்டைகளை இன்று பிற்பகல் 2 மணிக்குக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளமுடியும் எனக் கல்லூரி அதிபர் எஸ். கைலநாதன் தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியூடாகப் பரீட்சக்குத் தோற்றும் மாணவர்கள் யாவரும் பாடசாலை சீருடையில் வந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (25)

இனிய பிறந்தநாள் 1/2 வாழ்த்துக்கள்
இரண்டாவது அகவையில்



பெயர் : ஐசனோவர் அபியூ
முகவரி : 51, ஆறாம் குறுக்குவீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :----------
முகவரி:----------
பிறந்த ஆண்டு:----------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
----------
பெற்றோர் ஒப்பம்

## கலாசரம்



**தே**வாலயத்தில் ஆராதனை முடித்துக்கொண்டு படிகளில் இறங்கிக்கொண்டிருந்தார் அருட்தந்தை ஜேம்ஸ்.

"காலை வணக்கம் அருட்தந்தை! என்னை ஆசீர் வதியுங்கள் அருட்தந்தை" நல்லபடியா படிச்சு இந்த நாட்டுக்கு உன்னால் முடிஞ் சதைச் செய். கர்த்தர் எப்பவும் உன் கூடவே இருப்பார். போட்டு வா"



வாட்டசாட்ட மாய் நடந்து செல்கின்ற

சிறுகதை

# நினைவறியா நாட்களில்...

சாள்ஸைப் பார்க்கையில், சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் இடி, மின்னல் மழைகளுக்கு மத்தியில், கிழிந்த உடையுடன் பசி மயக்கத்தில் தேவாலயப் படிகளில் கிடந்த அந்தப் பிஞ்சு உடல் ஞாபகத்திற்கு வந்தது.

இன்று எப்படி வளர்ந்து விட்டான். இன்னும் கொஞ்சக் காலத்திற்குள், 'மருத்துவர் சாள்ஸ்' மனம்விட்டு சொல்லிப் பார்த்தார். இன்று முதல் நாளாய் பல்கலைக்கழகம் செல்கின்றவனின் நலனுக்காக மீண்டும் இறைவனைப் பிரார்த்தித்தபடி சென்றார் அருட்தந்தை.

புதுவசந்தங்களின் வரவால் பல்கலைக்கழகம் கோலாகலமாய் இருந்தது. பழைய மாணவர்களைப் பார்த்து மருண்டபடி காணப்படும் புதிய மாணவர்களும், ஒவ்வொரு புதிய 'மாணவர் குழுவையும் சூழ நான்கைந்து பழைய மாணவர்கள் கேள்வி கேட்பதுமாக களை கட்டியது.

வேப்பமர நிழலிற்கு சாள்ஸ"ம் இன்னும் சில மாணவியரும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

"ஏய்! உனக்கு என்ன பேர்?"

"ஷாமினி"

"அப்ப உன்ர அக்கான்ர பேரென்ன ஷாளினியே" என்றான் ஒருவன்.

"அத்தானுக்குப் பேர் அஜித்தே" என்றான் இன்னொருவன்.

"நீ என்ன பரிசோதனை குழாயில் பிறந்த குழந்தையே" என்றான் மற்றொருவன்.

"கொப்பற்ர பேரென்னடீ" என்றான் வேறொருவன்.

"ஷாமினி பெர்னாண்டோ"

"ஆ... அப்பிடி ஒழுங்காய் சொல்லவேணும்" எல்லோரும் ஒருமித்த குரலில் கூறினர்.

"என்ன கதாநாயகன் உங்கட பேர் என்ன?"

"சாள்ஸ்"

"டேய் இப்ப தானே சொன்னனான் கொப்பற்ர பேர் என்னடா?"

"அருட்தந்தை .ஜேம்ஸ்"

"இஞ்ச பாரடா மச்சான் அநியாயத்தை. இப்ப அருட்தந்தை எல்லாம் கலியாணம் கட்டுகினம்"

"ஓ... ஓ..." எனக் கூக்குரலிட்டு எல்லோரும் சிரித்தனர்.

"அம்மான்ர பேர் என்ன?" கிசுகிசுப்பாய் கேட்டான் ஒருவன்.

"அருட்தந்தை ஜேம்ஸ்"

"இதென்னடா இரண்டில் ஒன்றோ உதெல்லாத்தையும் விடு. தங்கச்சியின்ர பேர் என்ன?" என ஒருவன் அருகில் வந்தான்.

"அருட்தந்தை ஜேம்ஸ்"

"உன்ர ஆசிரியரின்ர பேர்"

" அருட்தந்தை ஜேம்ஸ்"

"இது ஏதோ கழண்ட கேஸ்தான். ஆரடா இவன்ர நண்பன் - எனக் கைதட்டியவன், சாள்ஸிடம் திரும்பி" உன்ர நண்பன் ஒருத்தன்ர பேர் சொல்லுடா"

"அருட்தந்தை ஜேம்ஸ்"

"டேய்! என்னட்ட அடிவாங்கப் போறாய் எங்கள என்ன கிறுக்கன்கள் எண்டு நினைச்சியோ என எழும்பவும், அருகே நின்ற ஷாமினி சைகையில் ஏதோ கூற,

"சரி சரி நீ போட்டு வா" என்றவன், அவன் அப்பால் நகர்ந்ததும்,

"சொல்லு என்ன காட்டினனீ அவனுக்கு விசரே"

"ஐயோ, இல்லையில்லை அவன் ஒரு அநாதை. நான்கு வயசில இருந்து அருட்தந்தை ஜேம்ஸ் தான் வளர்க்கிறார். அவனுக்கு எல்லாமே அவர் தான்" என்றாள் ஷாமினி.

தூரத்தே மாஸ்ரர் வருவதைக் கண்ட குழுவினர் சரியம்மா தங்கச்சி உங்கட தகவல்களுக்கு நன்றி போட்டு வாங்கோ" என்றான்.

அவனை விநோதமாகப் பார்த்தபடி அவர்கள் சென்றனர்.

அடுத்த வாரத்தில் ஒரு நாள் சில பழைய மாணவர்கள் சாள்ஸோடு சேர்த்து சிலரை தங்கள் அறைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு விசாரணைகளெல்லாம் முடிந்த பின்னர் ஒருவன், சிகரெட் ஒன்றினைப் பற்ற வைத்து புதிய மாணவனின் வாய்க்கருகில் கொண்டு சென்றான். அவன் அதனை வாங்கி புகைத்துத் தள்ளினான்.

"இது பிஞ்சில பழுத்தது. நீ போ" என்றுவிட்டு சாள்ஸின் வாயருகே ஒரு சிகரெட்டைக் கொண்டு சென்றான்.

சாள்ஸின் உடல் முழுவதும் இறுக்கம் பரவியது. ஆரம்பத்தில் சாதாரணமாக கைகளைத் தட்டியவன, மேலும் மேலும் அவன் கட்டாயப்படுத்தவும் வெறிகொண்டவன்போல அவன்மீது பாய்ந்தான். அவனது குரல்வளையை நெரித்தான். அதன் விபரீதத்தை உணர்ந்த பழைய மாணவர்களும், மாணவர்களுமாய் அவனை இழுத்தனர். ஆனாலும், அவனுடைய வெறித்தனமான சக்தியினை அவர்களால் அடக்கமுடியவில்லை. முரட்டுத்தனமாய் பற்றிய அவனது கரங்கள் ஓர் எல்லைக்கப்பால் சோர்ந்து தளர்ந்தன. அவன் மயங்கியபடி நிலத்தில் சரிந்தான்.

மாணவர்கள் யாவரும் பயந்துவிட்டனர். பின்னர் தண்ணீர் தெளித்து தேநீர் கொடுத்து ஒருவழியாக அவனை அனுப்பி வைத்தார்கள். அன்றிலிருந்து யாரும் அவனுக்கு பகிடிவதை செய்வதில்லை.

நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி, மூன்று வருடங்கள் முழுதாய் கழிந்து விட்டன.

இறுதிநாள் பரீட்சை எழுதிவிட்ட திருப்தியில் நான்கு பெண்களும் சாள்ஸோடு சேர்த்து ஆறு ஆண்களுமாக சிவராமின் வீட்டில் படம் போட்டுப் பார்த்தனர்.

சிவராமின் தாயார் அனைவருக்கும் தேநீரும் சிற்றுண்டிகளும் பரிமாறினார்.

இன்பமாக பொழுது சென்று கொண்டிருந்தது.

அது ஒரு பட்டாளக்காரரின் படம். இந்தியாவில் எல்லை வீரரை பட்டாளத்துக்காரர் என அழைப்பது வழக்கம்.

எல்லோரும் சிரித்துக் கதைத்தபடி படம் பார்த்தனர். ஆனால், சாள்ஸின் முகம் மட்டும் சிறிது சிறிதாய் மாற்றங்கண்டது. இதனை ஓரக்கண்ணால் அவதானித்த ஷாமினி மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த முன்னர், நிலைமை முற்றி விட்டது. சாள்ஸ் வெறி கொண்டவன் போல் 'நிப்பாட்டு! நிப்பாட்டு!' எனக் கத்தினான். பின்னர் மயங்கிவிட்டான்.



நீர் தெளித்து, விசிறி, தேநீர் குடித்த பின்னரும் களைப்படைந்து காணப்பட்டான். ஆகையால், ஓட்டோவில் கூட்டிச்சென்று அருட்தந்தையின் வீட்டில் படுக்க வைத்தனர்.

தேவாலயம் சென்று ஷாமினி நடந்தவை யாவற்றையும் ஒன்றும் விடாது அருட்தந்தைக்குக் கூறினாள். சிகரெட் திணித்தபோது நடந்தது முதல்கொண்டு பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த சில நிகழ்வுகளோடும் படம் பார்க்கையில் நிகழ்ந்தது வரை அனைத்தையும் கூறினாள்.

அருட்தந்தை மிகவும் மனம் வருந்தினார். மறுநாள் காலை அவனை மனநல வைத்தியரிடம் அழைத்துச் சென்றார்.

வைத்தியர் சாள்ஸிடம் பல கோணங்களில் கேள்வி கேட்டார். எப்படிக் கேட்டும், மிகவும் சிறிய வயதில் பெற்றோரைப் பிரிந்ததனால் அவர்களைப் பற்றி எந்தத் தகவலையும் அவனால் கூற இயலவில்லை.

பின்னர் அருட்தந்தையிடம் விசாரித்ததில் - சாள்ஸ் நாகர்கோவிலிலுள்ள தேவாலயத்தில் கிடைத்ததைக் கொண்டு அவன் அவ்வூரைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என முடிவெடுத்தார். அருட்தந்தை ஷாமினியிடமிருந்து கிடைத்த விடயங்களையும் கூறினார்.

எல்லாவற்றையும் கோர்த்துப் பார்த்த வைத்தியர், முதல நாள் பார்த்த படத்தோடு நாளை தனது வீட்டிற்கு வரும்படி கூறினார்.

கவலையோடு நோக்கிய அருட் தந்தையைப் பார்த்து, "நீங்கள் ஒண்டுக்கும் கவலைப்படாதேயுங்கோ. சில பிரச்சினையள் உரியவருக்குத் தெளிவாகத் தெரிய வேணும். தெரிஞ்சா பிரச்சினையில்லை. இளவயதில, சில காயங்கள் வரலாம். காயத்தைப் பாத்துத்தானே மருந்துபோட வேணும். எனக்கு நம்பிக்கை இருக்கு நீங்கள் போட்டுவாங்கோ..

மறுநாள் படக்கொப்பியுடன் சாள்ஸையும் அழைத்தபடி வைத்தியர் வீட்டிற்கு சென்றார் அருட்தந்தை.

அங்கே வைத்தியர் அவர்களுக்கு தேநீர் கொடுத்துவிட்டு அரைமணி நேரமாக வேறு கதைகள் கதைத்துப் பொழுதைப் போக்கினார்.

பின்னர், "அருட்தந்தை நீங்கள் கேட்ட மருந்து இங்க இல்லை. வாங்கி வர ஆளை அனுப்பீட்டன். அது மட்டும் உந்தக் கொப்பியைத் தாங்கோ பார்ப்பம்" என்று கூறியபடி வாங்கி படத்தைப் போட்டார்.

சாள்ஸ் படத்தைப் பார்க்க, மற்ற இருவரும் அவனது உணர்வுகளை அளவெடுத்தனர். படத்தில் பட்டாளத்துக்காரனைக் காட்டியதும் சாள்ஸின் முகம் மாறியது. படத்தை நிறுத்தும்படி கூறினான். வைத்தியர் நிறுத்தவில்லை.

அதில் ஒரு பாலியல் வல்லுறவுக் காட்சி வந்தது. சாள்ஸ் வெறி கொண்டவனானான்.

வைத்தியரின் முன் ஏற்பாட்டின்படி நான்கைந்து ஆண்கள் அசையவிடாது அவனை நிலத்தில் அழுத்தினர். அதில் ஒருவன் சிகரெட் துண்டு ஒன்றினை சாள்ஸின் வாயினுள் திணித்தான்.

சாள்ஸ் திமிறினான். "ஐயோ! என்னை விடு என்னை விடு" என கத்தினான். அவர்கள் விடவில்லை. மேலும் மேலும் அழுத்தமாகப் பிடித்தனர்.

"என்னை விடு. என்னை விடு" எனக் கத்தியவன், ஒரு கட்டத்தில், "அம்மாவை விடடா அம்மாவை விடடா" என அலறினான். பின்னர் மயங்கிவிட்டான். நிலத்தில் அவனை அழுத்தியவர்கள் அவனை கட்டிலில் தூக்கி கிடத்தி மின் விசிறியைப் போட்டுவிட்டுச்சென்றனர்.

அருட்தந்தை ஜேம்ஸிற்கு எதுவுமே புரியவில்லை. வெலவெலத்துப் போய்விட்டார்.

புன்சிரிப்போடு அருகில் வந்த வைத்தியர், "பிரச்சினை தெரியும் மட்டும்தான் பயப்பிடவேணும் நான் போட்ட கணக்கு சரியா முடிஞ்சிட்டுது" என்றார்.

பின்னர் சாள்ஸின் தலையைக் கோதிவிட்டு "இதெல்லாம் எங்கட நாட்டின்ர தலைவிதி, வேலியே பயிரை மேயுது.

தமிழன்ர தலைவிதி.

நினைவறியா நாட்களில் பிஞ்சு மனங்களில் பதிந்த வடுக்கள்." என்று கூறி நிமிர்ந்தார்.

அவர் கண்களிலும் இரண்டு சொட்டு நீர்த்துளிகள் தமிழனுக்காய் தமிழ் மண்ணை நனைத்தன...

♦ ♦ ♦


(யாவும் கற்பனை)

ந.ரஜிதா

# நூல் அகம்

## புலம்பெயர் கவிதை

உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை என்பவற்றை உள்ளடக்கிய நூல் ஒன்று வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் இந்த நூலினை எழுதியுள்ளார்.




இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி - நூலாசிரியர் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'கலாநிதி விசாகரூபன் ஆழ்ந்த தமிழறிவினைக் கொண்ட இளைஞர். எந்த விடயத்தையும் கூர்ந்து அவதானித்து சீர்தூக்கிப் பார்த்துக் கருத்து வெளியிடும் ஆற்றல் கொண்டவர். ஒவ்வொரு விடயத்திலும் ஆழ்ந்த புலமையுள்ள அவரின் செயற்பாடுகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. மண்மீது விருப்பு, தமிழ் மாணவர் கல்வித்தரம் உயரவேண்டுமென்பதில் அவருக்கிருக்கும் ஆர்வம் - அவரது பல்வேறு செயற்பாடுகளிலிருந்து அவதானிக்கக் கூடிய உயர்வான பண்புகளாகவுள்ளன. புலம்பெயர் நாவல், புலம்பெயர் சிறுகதைகள் குறித்தும் ஆராய்ந்து நூல்களை இயற்றவேண்டும்' என்கிறார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையின் முன்னாள் தலைவரும், பேராசிரியருமான முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியனுக்கு இந்த நூல், ஆசிரியரால் சமர்ப்பிக்கப்படுகின்றது - கையுறையாக்கப்படுகிறது.

புலம்பெயர் கவிதைகள் தொடர்பான இந்த நூலில் இலங்கைத் தமிழர்களின் புலம்பெயர்ச்சி, அதன் பன்முகத் தன்மை, அதற்கான காரணங்கள் - புலம்பெயர் கவிதைகளில் உருவம், உள்ளடக்கம், உணர்த்தும்முறை ஆகியன குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

நான்கு இயல்களாக வகுக்கப்பட்டுள்ள இந்த நூல், ஒவ்வொரு இயலிலும் கூற எடுத்துக்கொண்ட விடயத்தை தனித்தனியே சுருக்கமாக வாசகர்கள் நன்கு விளங்கிக் கொள்ளத்தக்கமுறையில் எழுதப்பட்டுள்ளன.

புலம்பெயர் இலக்கியங்கள் பன்முகப்பட்டதாக இருக்கின்றன. நாடகம், சிறுகதை, கவிதை என அதன் வகை பலவாக உள்ளது. இந்த நிலையில் புலம்பெயர் கவிதைகளை ஆய்வுக்கு எடுத்ததற்குரிய காரணத்தையும், புலம்பெயர்வின் பன்முகத் தன்மையையும், புலம்பெயர்வு இடம்பெற்ற காலங்கள் எவை, அவை ஏன் இடம்பெற்றன என்பதையும் இந்த நூலின் முதலாவது இயல் நன்கு வெளிப்படுத்தியுள்ளது.

நூலின் இரண்டாவது இயல் - புலம்பெயர் கவிதை பற்றிய ஆய்வில், புலம்பெயர் கவிதையின் உருவம் பற்றிய ஆய்வாக விரிவடைகின்றது. இயலின் ஆரம்பத்தில் புலம்பெயர் கவிதைகளை எழுதிய கவிஞர்கள் - எத்தகைய இயல்புடையவர்கள், புலம்பெயர் கவிதைகளை எழுதிய கவிஞர்களின் மனப்பாங்கு எத்தகையதாக இருந்தது என்பதையும், புலம் பெயர் கவிதைகளை எழுதிய கவிஞர் வரிசை ஒன்றையும் நூலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

புலம்பெயர் கவிதைகளின் பெரும்பாலானவற்றின் வடிவம் புதுக்கவிதை வடிவமாகவே விளங்குவதை, ஆசிரியர் தக்க சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.

இந்த நூலின் மூன்றாவது இயலில் - புலம்பெயர் கவிதைகளின் உள்ளடக்கம் பலவாகக் காணப்பட்டபோதிலும், புலம்பெயர்ந்து சென்றவர்கள் தாம் செல்லும் வழிகளிலெல்லாம் பட்ட இன்னல்கள், இழப்புக்களை உணர்வுபூர்வமாக விளங்கும் கவிதைகள் முதன்மை இடத்தை வகிப்பதைச் சான்றுகளுடன் இந்த நூலில் எடுத்துக்காட்டப்படுகின்றது.

அதேபோன்று புலம்பெயர் கவிதைகளின் உள்ளடக்க வகைகளை எடுத்துக்கூறி, அவற்றிற்கு கவிஞர்களின் கவிதை வரிகளையும் சான்றாகத் தருகின்றார்.

வசதியற்ற தங்குமிடம், வீசாச் சிக்கல், நிறவெறி, இயந்திரமயமான வாழ்வு, அந்நிய மனோபாவம், அகதி உணர்வு, தாயகம் பற்றிய ஏக்கம், தகுதிக்கேற்ற தொழிலின்மை, புதிய பண்பாட்டுச் சூழல், பெண்நிலைவாதக் கருத்துக்கள், சீதனக் கொடுமை, பாலியல், அரசியல் விமர்சனம், உலகு தழுவிய பார்வை, புலம்பெயர் தமிழர்களின் பன்மொழியறிவு ஆகியன உள்ளடக்கங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

நான்காவது இயலில் - புலம்பெயர் கவிதையின் உணர்த்து முறை பற்றிய செய்திகள் வருகின்றன.

மொழிநடை, உவமைகள், உருவங்கள், குறியீடுகள், படிமங்கள் உணர்த்து முறையில் முக்கியமானவை. இவற்றை புலம்பெயர் கவிதைகளில் காண்கின்றார் ஆசிரியர்.

ஒரு கவிதை எவ்வாறு பார்க்கப்படவேண்டும் என்று ஒரு மாணவனுக்கு எடுத்து விளக்கும் வகையில் புலம்பெயர் கவிதைகளை இந்த நூலின் நான்கு இயல் மூலமாகவும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

க.பொ.த. உயர்தரமாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வெளிவாரி கற்கைநெறி மாணவர்கள், கவிதையில் ஆர்வம் கொண்டவர்கள், கவிதை பற்றிய ஆய்வில் ஈடுபட முயல்பவர்கள் கட்டாயம் படிக்கவேண்டிய ஒரு நூல் இதுவாகும்.

எளிய தமிழ் நடையில் அழகாக எழுதப்பட்டுள்ள இந்த நூலினைப் படிப்பதன்மூலம், புலம்பெயர் இலக்கியங்களை கற்ற திருப்தி உண்டாகும்.

- நகுலன்

## இலக்கிய முத்து

# ஆற்றோடு போனு...

அவர்கள் இருவரும் தம்பிகள். ஆண்டவன் படைப்பின் அவலத்தைகளால் அவர்களால் பிரியவே முடியாது. பரமன் படைப்பிலே அண்ணன் கண்கள் இரண்டும் பார்வையற்றவை. தம்பிக்கோ நடப்பதற்குக் கால்களில்லை. இவர்கள் தான் நாயக்கர் காலத்தின் இணைபிரியா இரட்டைப் புலவர்கள் இளஞ்சூரியரும், முதுசூரியரும்.

பஞ்சத்திலும், நெஞ்சத்தை உருக்கும் நல்குரலினது நிழல்கள் இவர்கள்மேல் என்றும் நிரந்தரமாயின. ஒரு சிறு பருக்கை உணவிற்காகத் தெருவெல்லாம் அலைந்து திரிய வேண்டிய அவலம். அண்ணன் தோள்களில் ஆசைத் தம்பி அமர்ந்திருந்து வழி காட்டுவான். கற்களும், முட்களும் நிறைந்த கான்களில் நடக்கும்போதுகூட கவித்துவம் விஞ்சிநிற்கும். அண்ணன் ஆரம்பித்து வைப்பான். மிகுதியை தம்பி முடித்து வைப்பான். அந்தாதி பாடுவதற்கென்றே ஆண்டவனால் படைக்கப்பட்ட ஜீவகள் இவர்கள்.

அன்றொரு நாள் மதியம் ஆற்றங்கரையில் தம்பியைத் தாங்கி அண்ணன் நடக்கின்றான். அப்பொழுதுதான் ஞாபக அலைகள் அற்றம் காக்கும் அந்தக் கந்தையான துணியினை அலசிப் பல நாட்களானதை உணர்த்தின.

அற்றத்தைக் காக்கும் அந்த ஆயிரம் கண்ணுள்ள துணியினை அலசுகின்றனர் - அண்ணனும் தம்பியும். வெந்த புண்ணிலே வேல்பாச்சுவது போன்று ஆண்டவனும் அவர்களைச் சோதிக்கின்றான். அற்றம் காக்கும் ஆடை ஆற்றில் அள்ளப்பட்டுப் போகின்றது. அதைக்கண்ட இரட்டையர்கள் இடிந்து போகவில்லை. 'தண்ணீரிலே எந்தநாளும், தப்பித் தப்பி அடிப்பதால், அது எம்மை விட்டுத் தப்பிவிட்டது' இது அண் ணனின் தொடக்கம்.

'பரதவர் வலை போன்று பார்க்குமிடமெல்லாம் ஓட்டை, அது ஆற்றிலே அள்ளப்பட்டுச் சென்றாலும் என்ன, நம்மிடம் இருந்தாலும் என்ன ஒன்று தான்' இது தம்பியின் முடிவு.

அப்பிலே தோய்த்ததனை நிதம்
தப்பினால் எம்மையும் தப்பாதோ
ஆனாலும் கந்தை அதிலுமோர் ஆயிரங்கண்
போனாலும் போச்சென்ன போ.

தனிப்பாடற்திரட்டு
- லெஸ்லி

# கண்ணகித் தாயே....!



வாவிக் கரையினிலே கண்ணம்மா
காவி பிடிக்குதம்மா,
தேவியை தினமும் கண்ணம்மா
மேவியே பாயுதம்மா.
நெல்மணிக்கரையினிலே கண்ணம்மா
நீட்டிய படியே கழுத்தழகியம்மா
நாடி வரும் பக்தர் கூட்டம் கண்ணம்மா
நீர் தோய்ந்த வஸ்திரம்மா
சின்னஞ்சிறார்கள் கண்ணம்மா
தேம்பி தேம்பி அழுகிறாரம்மா.
ஓடிவரும் கூட்டம் கண்ணம்மா
ஓய்வு உறக்கம் இல்லையம்மா
ஐந்தறிவும் ஆங்காங்கே கண்ணம்மா
அலைந்தே அங்கு திரியுதம்மா
கதிரவன் கொடுமை கண்ணம்மா
கண்ணைப் பறிக்குதம்மா
முதியோர் மாலையாகியும் கண்ணம்மா
முண்டியடித்து இல்லம் ஏகிறாரம்மா
வண்டி வாகனங்கள் கண்ணம்மா
விரைந்தே விறுவிறுப்பாகப் பறக்குதம்மா
அவரவர் மாடங்களிற்கு கண்ணம்மா
ஆடி ஆடியே செல்கிறாரம்மா

-த.சண்முகவேல்

# நடப்பு

சேவல் கூவியது.
'நான் எழும்போது இந்தச் சேவல்
எத்தனை பெரிய அன்போடு
என்னை வாழ்த்துகிறது...'
என்று கதிரவன் பூரித்துப்போனான்.




மாலை வந்தது.
கதிரவன் மேற்குத் திசையின்
மூலையில் கவிழ்ந்தான்.
சாயும்போது -
'நான் விழுகிறேனே...
என்னைத் தாங்க
யாருமே வரமாட்டார்களா'
என்று ஏங்கினான்.

சேவலை அவன் எதிர்பார்த்தான்
வரவில்லை.
விழுந்துகொண்டே கதிரவன் சொன்னான் -
'எழும்போது தாங்க
வருகிறவன் எல்லாம்
விழும்போது தாங்க
வருவதில்லை'

— காசி ஆனந்தன் —

# வெறுமை!



நேற்று குடை பிடித்த
நினைவும்,
நனைந்த மழைத்துளியும்
சுட்ட வெயிலும், நிழலும்
காத்திருந்த
பேருந்து தரிப்பிடமும்,
எத்தனை
பக்கத்தினை நிரப்பியது
நாட்குறிப்பேட்டில்!

பட்ட மரத்தின் கீழ் நிழல்
தேடி,
மழையில் ஓட்டைக்குடை
பிடித்து
கிழிய இடமில்லாத சேட்டும்
கிழிந்த காற்சட்டையும்
அணிந்து,
கைவலிக்க இறுக்கிக் கட்டிய
கோயில் நூலும்
அந்த நாட்களில் மட்டும்
நம்பிக்கை!

பணம் கொடுத்து
போடும் ஊசி வலிக்காது,
ஒரு நாளும்
போனதில்லை
தனியார் மருத்துவமனைக்கு!



ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு இருக்கையில்
இருந்தும்,
நெருக்கத்தில் அவிந்தும்,
ஒரு நாளும்
வெறுமையாகப் போனதில்லை
பேருந்து!

சீனா வெடி கொளுத்தவும்
குப்பை போடவும்
சேட்டைகள் செய்யவும்
பொழுது போக்குவதற்கும்
போக்குவரத்துக்கும்
கைவிடப்பட்டோருக்கும்
நடு வீதி!

எனது ஊரில் பல
வீடுகள்,
ஷெல் விழுந்து இடிந்தும்
கிபிர் குண்டு வீழ்ந்து அழிந்தும்,
இருக்க வீடு இன்றி
மக்கள்,
இழப்பீட்டுக்கு விண்ணப்பங்கள்
கோரியும்,
கூடுதலாகக் கட்டப்பட்டது.
இடிந்த
இடியாத கோயில்கள்!

மரத்தில் இருந்து ஒவ்வொரு
இலையும்,
ஒன்றின் பின் ஒன்றாக
பிரிந்து தன் போக்கில்
இருபக்கமும் மாறி, மாறி
மேலும் கீழுமாக,
நிமிர்ந்தும், சரிந்தும்
அசைந்தும், நெளிந்தும்
அங்குமிங்கும் ஓடியாடி
கீழே வந்து விழும்
சருகாக!

ஆகாய வெளியில்
அந்தரத்தில்
நெடுந்தூரம் போய்வரும்,
இயற்கைக்கு அழகாக
இயற் பெயரில் கவிதையாக
எத்தனை நல்லவர்கள் கரங்களில்
மாட்டியதுண்டு,
அதற்கு மட்டும் கூட்டும்
தனிமையும்
ஒத்துப் போகும்,
இருக்க விருப்பம் தான்
பறவையாய்!

சாத்திரியிடம் அடிக்கடி
வாழ்க்கைப் பயன் கேட்டு
பரிகாரமாக
அவரவர் நட்சத்திரத்தில்
தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்தும்
முடியாத காரியம்.

- செல்வம்

### தந்தை செல்வநாயகம் அவர்களின் நினைவாக...

# எமது இறைமை எமது கையிலே

தந்தை செல்வா இறந்து 27 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இன்று அப்பெரியவரின் நினைவுநாள். அன்று தந்தை செல்வா கூறியவற்றை அவரது நினைவு நாளில் மீண்டும் நினைவுபடுத்திக்கொள்வது இன்றைய சூழ்நிலையில் மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், நடந்துமுடிந்த தேர்தலும் அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகளுயும் இவ்வாறான எணணத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தலின் பின்னர் சிங்களம் குளம்பிப் போயுள்ளது. ஆனால், தமிழீழம் உறுதியாகவுள்ளது. ஆட்சியைப்பிடிக்க ஐ.தே.கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் போட்ட போட்டி, தொங்கு நாடாளுமன்றத்தில் போய முடிவடைந்துள்ளது. எவருக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத நிலைமை ஒருபுறம். மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) க்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் வெளிவந்து, சாதாரண பெரும்பான்மைக்கட்சியாக வந்தும், ஆட்சி அமைக்கமுடியாமல் இருக்கும் நிலைமை மறுபுறம். பிரதமமந்திரி தெரிவு, அமைச்சுக்களின் நியமனங்களில் ஏற்பட்டுள்ள இழுபறி அக்கட்சிகளின் உள்ளக முரண்பாடுகளை வெளிக்காட்டி நிற்கின்றன. இக்கட்சிகள் கூட்டணி அமைக்கும் போழுதே இது நிலையான ஒற்றுமையால் ஏற்பட்ட கூட்டணி அல்ல என்பது தெரிந்ததே. அறுதிப் பெரும்பான்மை கிடைத்தாலகூட இந்தக் கூட்டணியால் ஓர் ஆண்டுக்குமேல் ஆட்சியைக் கொண்டுநடத்த முடியாமல் முரண்பாடுகள் வளர்ந்துவிடும். ஆட்சி கவிழும் என்ற எதிர்பார்ப்பே எல்லோரிடமும் இருந்தது. சிறுபான்மை அரசாகவுள்ள இந்த ஆட்சி, எவ்வளவு நாட்கள் அல்லது மாதங்கள் தொடரும் என்று எண்ணிக்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறு குழம்பிப்போயுள்ள சிங்களத்தில் சிங்களத்துக் குடியரசுத் தலைவி புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவந்து, தான் பிரதமமந்திரியாக வர ஆர்வம்கொண்டு சில நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றனார். 1970 இன் நாட்டின் அரசியலமைப்பை மாற்றி சிறிலங்காவைக் குடியரசாக மாற்றுவேன் எனக்கூறி, மக்கள் ஆணையைப் பெற்ற காலம்சென்ற சிறிமாவோ பண்டாரநாயக்க 1972 இல் நாட்டைக் குடியரசாகப் பிரகடனப் படுத்தினார். 1970 இல் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றம் - அரசியலமைப்புச் சபையாக மாறி, புதிய அரசியலமைப்பைத் தயாரித்து, அப்பொழுது சிறிமாவோ விடுத்த அழைப்பை ஏற்று தந்தை செல்வா அரசியலமைப்பு சபையில் பங்குபற்றினார். தமிழ் மக்களின் ஒற்றுமைக்குரலாகத் தமிழ் மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கைகளை அரசியலமைப்புச் சபையில் தந்தை செல்வா முன்வைத்தார். இக்கோரிக்கைகள் அத்தனையும் ஆட்சியாளரால் நிராகரிக்கப்பட்டன. இவற்றைச் சிங்கள ஆட்சியாளர்கள் நிராகரித்தது ஆச்சரியப்பட வைக்கக் கூடியதல்ல. ஏனெனில், சிங்கள ஆட்சியாளர்களது நோக்கமே - தமிழர்களைப் படிப்படியாக அழித்து பௌத்த - சிங்கள அரசு அமைப்பதே ஆகும். இச்சிங்கள ஆட்சியாளருடன் ஒத்துப் பாடி, தமிழர்களின் உரிமைகளைக் கேவலப் படுத்திய மூவர் தமிழர் பகுதிகளிலிருந்து நாடாளுமன்றம் சென்றவர்கள் என்பது வேதனைப்படவும் வெட்கப்படவும் வைத்த நிகழ்வாகும். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்ற ஆனந்தசங்கரி, அருளம்பலம், தியாகராசா ஆகிய மூவரும் தாம் சார்ந்து வெற்றி பெற்ற கட்சியின் முடிவுகளுக்கு மாறாக சிங்களத்தின் ஆளும்கட்சி உறுப்பினர்களாக மாறி, தந்தை செவ்வாவினால் முன்வைக்கப் பட்ட தமிழர்களின் கோரிக்கைளை எதிர்த்தனர், துரோகம் செய்தனர். இதன் பின்னர் தந்தை செல்வா அரசியலமைப்புச்சபையை விட்டு வெளியேறினார். தந்தையின் தலைமையில் இதர உறுப்பினர்களும் வெளியேறினர். தமிழ் மக்களின் பங்களிப்பின்றி அரசியல் யாப்பு உருவாகி 1972 மே 22 இல் சிறிலங்கா குடியரசானது.

அன்று தாயார் புதிய அரசியலமைப்பை உருவாக்கியதை மனதில்கொண்டு, இன்று மகளும் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வர முயற்சிக்கிறார். தற்போதைய 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு முரணாக, தனது கைக்கூலிகளின் சட்ட ஆதரவுடன் புதிய அரசியலமைப்பைச் சிறிலங்காவுக்குக் கொண்டு வரச் செய்யப்படும் முயற்சிகள் எவ்வளவு தூரம் வெற்றிபெறும் என்பது கேள்விக்குறியே. ஆனாலும், சிங்கள மக்கள் சந்திரிகா கேட்ட ஆணையை வழங்கியுள்ளனரா என்றால் - இல்லை என்பதே பதிலாக அமையும். தெளிவான ஆணையைச் சிங்கள மக்களால் வழங்கப்படவில்லை. ஆனால் தமிழ் மக்கள் உறுதியான ஆணையை வழங்கியுள்ளனர். இந்த ஆணையைப் பற்றி நிற்கவேண்டியது தமிழ நாடாளுமன்ற உறுப் பினர்களின் கடமையாகும். அன்று ஆனந்தசங்கரி, அருளம்பலம், தியாகராசா ஆகியோர் இருந்தது போன்று இன்று டக்ளஸ், கதிர்காமர் போன்றோர் இருப்பது வேதனைக்குரியது தான்.

காக்கைவன்னியனும் எட்டப்பனும் என்றுமே எம்மண்ணில் இருப்பது ஏன்? என்றுதான் நொந்துபோய்க் கேட்கவேண்டியுள்ளது. 1972 இல் அரசியலமைப்புச் சபையிலிருந்து தமிழ் உறுப்பினர்கள் வெளியேறியது . தமிழ் மக்களின் சம்மதம் இன்றி சிங்களம் இயற்றிய அரசியல் யாப்பு, தமிழ் மக்களின் இறைமையைக் கட்டுப்படுத்தாது. தமிழ் மக்கள் தங்கள் இறைமையை எச்சந்தர்ப்பத்திலும் சிங்களவரிடம் இழக்கவில்லை. தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுள்ள இனம். தமிழினம் தன் இறைமையைப் பாவித்து தனது விருப்பப்படி அரசொன்றை அமைப்பதே தமிழ் மக்கள் முன்னுள்ள ஒரேவழி என்று வட்டுக்கோட்டைத் தீர்மானம் கூறிற்று. 1977 இல் தந்தை செல்வா இறந்துபோனார்.

அதே ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டது. தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தந்தை செல்வாவின் சமாதியில் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். வட்டுக்கோட்டைத் தீர்மானம் தந்தை செல்வா விட்டுச்சென்ற உயில் என்றும் கூறினர். கொழும்பு நாடாளுமன்றம், கோட்டே ஜயவர்த்தனபுரத்திற்குச் சென்றால் நாங்கள் நல்லூருக்குச் சென்று தமிழ் மக்களுக்குரிய அரசியலமைப்பை உருவாக்குவோம் என்றனர்.



ஆனால், இவர்கள் தேர்தலில் வென்ற பின்பு தந்தை செல்வாவின் உயிலை உதறி எறிந்துவிட்டு, நல்லூரை மறந்துவிட்டு, ஜயவர்த்தனபுரவிற்குச் சென்றனர். ஆனால் 1978 அரசியலமைப்பு உருவாக்குவதில் பங்கு பற்றாது நல்ல செயலையும் செய்தனர். அத்துடன் அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் பற்றிய விவாதங்களிலும் பங்குபற்றவில்லை. இது இங்கு ஏன் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது என்ற கேள்வி எழுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மக்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளை மறந்ததுடன், தந்தை செல்வாவின் கொள்கையான அரசியல் யாப்பின் திருத் தங்களில்கூடப் பங்கு பற்றக்கூடாதென்ற அடிப்படையையும்மீறி பின்னர் நடந்துள்ளனர். அயலகத்து நெருக்குதலால் இவ்வாறு தடம்புரண்டனர் த.வி.கூட்டணியினர்.

இன்று சந்திரிகா புதிய அரசியலமைப்புச் சபையை நிறுவ முனைகின்றார். இது தமிழ் மக்களுக்கான அரசு அமைப்பதற்கானதல்ல. சிங்களத்தின் அரசியலமைப்புச் சட்டத்தை மீறியும் எழுதலாம், சட்டத்திற்கமைவாகவும் எழுதலாம். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்குகொள்ளமாட்டார்கள் என்பது யாவரும் அறிந்ததே. ஏனெனில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணை அத்தகையது. தமிழ் மக்கள் தமது இறைமையை வேறு யாருக்கும் தாரை வார்த்துக்கொடுக்கத் தயாரில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள். அவர்களுடன் பேசித் தீர்வு காணவேண்டும் என்பதுதான் ஆணை. இந்த ஆணையை நிறைவேற்று வதைத்தவிர வேறு எதுவும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை. 1972 இல் தந்தை செல்வா தலைமையில் அரசியல மைப்புச் சபையிலிருந்து வெளியேறி, தமிழ் இனத்தின் இறைமையை உலகுக்கு உணர்த் திய வரலாற்றுப் பதிவை இன்றைய அவரது நினைவு நாளில் நினைவுகூரப்படவேண்டிய தாகும். சிங்களத்திற்கான அரசியல் யாப்புத் தயாரிக்கும் அரசியலமைப்புச் சபையில் தமிழ் மக்களின் பங்களிப்புத் தேவையில்லை என்பதில் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியாக இருக்கவேண்டும்.

தமிழர் தேசியக் கூட்டமைப்பு - தந்தை செல்வா தொடக்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தேர்தலில் போட்டியிட்டு ஒற்றுமையைக் காட்டியுள்ளனர். நாடு வேண்டும் என்பதற்காக வீடு வேண்டும் என்று மக்கள் வாக்களித்துள்ளனர். இன்று ஏற்பட்டுள்ள ஒற்றுமை நிலையானதாக, உறுதியானதாக அமைந்துள்ளது. நாடாளுமன்றக் கதிரைக் கான ஒற்றுமை பயன்தராது. இலட்சியத்தின் அடிப்படையில் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்பது தந்தை செல்வாவின் கருத்தாகும். அவ்வாறு ஏற்படும் ஒற்றுமைதான் தமிழினத்தின் மீட்சிக்கு வழிவகுக்கும் என்று தந்தை அடிக்கடி கூறுவார்.

இதேபோன்று பிரதேசவாதத்தையும் இல்லாமற்செய்ய அவர் அரும்பாடுபட்டார். அந்தப்பணியில் அவர் பெருவெற்றியும் கண்டார். இந்த ஒற்றுமைக்கு இடைக்கிடையே சோதனை ஏற்படுவதும் உண்டு. இவ்வாறே தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்க சில சக்திகள் முயன்றன. ஒற்றுமைக்கு இடர் வருவது போன்ற மாயை தென்பட்டது. ஆனால், எமது தேசியத் தலைவரின் நுட்பமான ஆற்றலால் பாரிய இழப்புக்களின்றி வெற்றி கொள்ளப்பட்டது.

இவ்வாறு தமிழினம் இன்று ஒற்றுமைப்பட்டு நிற்பது பெருமைப்படக்கூடியதாகும். தந்தை செல்வாவின் நினைவு நாளில் தமிழ் மக்களின் ஒற்றுமை உறுதியாக இருப்பதைத் தமிழ் மக்கள் நினைவில் நிறுத்தி. தங்கள் இறைமையை வேறுயாருக்கும் கொடுக்காது தமது எதிர்காலத்தைத் தாமே உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். □

பரணி

---

அரசியல் நோக்கு

க. ஐங்கரன்

# தமிழ் தேசியம்

தென் இலங்கை அரசியல் அருவருக்கத்தக்க வடிவங்களை முன்னெடுத்துக்கொண்டு செல்கிறது. அதிகார ஆசையோடு ஐந்து ஆண்டுக்கு அல்ல இரு ஆண்டுக்கு ஒருதடவை தேர்தலுக்கு முகங்கொடுக்கின்ற துயரத்தை இலங்கை மக்கள் கடந்த பல ஆண்டுகளாக அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர். இந்த துயரத்துக்குள் சிங்கள மக்கள் மட்டுமல்ல தமிழ், முஸ்லிம் மக்களும் அகப்பட்டுள்ளனர். இந்த உரிமைக் களத்தில் தமிழ் மக்களின் அரசியல் தலைமை முன்னெடுக்கவேண்டியதை நோக்குவோம்.

சபாநாயகர் தெரிவின்போது எந்த அரசியல்கட்சி வெற்றி பெற்றதென்பதல்ல அடிப்படை விடயம், அப்போது நாடாளுமன்றத்தில் நிகழ்ந்தவையே முக்கியம். மக்களால் வழிபடும் தகுதியுடைய பிக்குமார் நாடாளுமன்ற சம்பிரதாயத்தை மதிக்காத விடயம், வாக்களிப்பின் இரகசியத்தன்மைக்கு மாறுபாடாக நடந்தகொண்ட போக்கு, வாக்குப் பெட்டிக்கு மேல் குந்தியிருந்தமை, நாடாளுமன்றத்தின் தொடக்க உரைகளைக் குழப்பியமை என அரசியல் கலாசாரத்திற்கு விரோதமாகச் சிங்கள பெரும்பான்மையினர் நடந்துகொண்டமை அருவருக்கத்தக்கவையாக அமைந்திருந்தன. சிங்கள அரசியல் தலைமைகளும், புத்திஜீவிகளும் பெரிதாகத் தம்பட்டம் அடித்தார்களே அன்றி, அவர்களது அரசியல் நாகரிகம் வளரவில்லை. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே! இந்த வெட்கம்கெட்ட அரசியல் அநாகரிகத்தைத் தயவுசெய்து நீங்களும் கற்றுவிடாதீர்கள். நாடாளுமன்றத்திற்கும், வாக்கெடுப்புக்கும், சபை நிகழ்வுக்கும் மதிப்பழிக்க பெரும்பான்மையினருக்குக் கற்றுக்கொடுங்கள். ஒரு சபைத் தலைவரை தெரிவதில் அவர்கள் காட்டிய பண்பாடுபோதும், இனப்பிரச்சினையில் எப்படி நடந்துகொள்வார்கள் என்பது தமிழ் மக்களுக்குப் புலனாகும்.

அதனால், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்- சிங்கள தலைவர்களையோ, நாடாளுமன்றத்தையோ நம்பி ஆசனங்களில் அமர்ந்துவிடாதீர்கள். எங்கள் இனத்தின் துயரத்தின் வரலாற்றுக்கு முடிவை நாங்களே தெரிவுசெய்யவேண்டும். சிங்கள தலைமைகளின் இழுபறியிலும் போட்டியிலும் நாம் எமது காலத்தை இனியும் கழிக்கமுடியாது. மிகநீண்டகாலமாக அவர்கள் கோழிச் சண்டைபுரிய, பார்த்திருந்த வரலாறுதான் தமிழனின் நாடாளுமன்ற வரலாறாக இருந்தது. அதனை இனியும் செய்யவேண்டாம். தெளிவான கால அட்டவணையை சிங்கள சமூகத்திற்கும், சர்வதேச சமூகத்திற்கும் முன்வையுங்கள். அதனை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்திடம் எங்கள் பிரச்சினையை முன்னெடுங்கள். அவர்களிடம் எங்கள் பொறுமையையும், காலத்தையும் விபரியுங்கள். இனியும் சிங்களதேசத்தை நம்பி, பிரச்சினையைத் தள்ளிப்போடமுடியாது என்ற நிலைமையை உருவாக்குங்கள்.

இன்னும் எவ்வளவு காலத்திற்குக் காத்திருப்பது. சிங்கள அரசியல் தலைமை காலத்தைத் தள்ளிப்போடுவதன்மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகண்டு வந்துள்ளது. ஒவ்வொரு சிங்கள ஆளும் தலைமையும், எதிர்த் தலைமையும் தமக்குள் உள்ள பகைமைக்காகத் தமிழரது உரிமைகளைக் காலம் தாழ்த்தியது. இது சிங்களத் தலைமைகளின் தந்திரம். இதனை நீடிக்க விடாது, முடிவுகட்டவேண்டிய பொறுப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரியது.

மிகநீண்டகாலமாகப் போரிட்டு அழிந்துகொண்டிருந்தது மட்டுமல்லாது, ஜனநாயக வழியை நிராகரித்த தமிழர்களை மீளவும் ஜனநாயக வழிக்கு இழுத்த சர்வதேச சமூகத்திடம் ஜனநாயகரீதியில் உரிமைகளைப் பெறுவதற்குச் சாத்தியமான உதவிகளை ஆற்றுமாறு வலியுறுத்துவது அவசியம். எங்கள் மக்களது துயரத்தில் தொடர்ந்து சிங்கள தலைமைகளைக் குளிர்காய அனுமதிக்கமுடியாது. மிகத்தெளிவாக இந்த நாடாளுமன்றத்திலே முடிவுகளை எடுக்க நிர்ப்பந்திக்கவேண்டும்.

தமிழர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒன்று - உரிமைகளை வழங்கு அல்லது பிரிந்து செல்ல அனுமதி என்பதாகும். சிங்களதேசம் அக சுயநிர்ணயத்திற்குட்பட்ட தீர்வை முன்வைக்கும் என்பது சந்தேகமானதேயாகும். ஆதலால், சிங்கள தலைமைகளின் அரசியலுக்கு முண்டு கொடுப்பதோ, பதிலளிப்பதோ தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய பணியல்ல. அதனை ஒரு பகுதியான ஓரம்சமாகக் கருத்தில் கொண்டு, தமிழரின் போராட்டத்தைச் சர்வதேசமட்டத்தில் நியாயப்படுத்துவதும் அதற்கு வலுச்சேர்ப்பதும் உங்கள் பிரதான பணியாகவுள்ளது.

அத்தோடு, உங்களுக்கு வாக்களித்த மக்களையும் அவர்களது துயரத்தையும் மறந்துவிடாதீர்கள். பத்திரிகைகளின் அறிக்கை மட்டும் விட்டால்போதாது, அவற்றை வேலைத் திட்டமாகக்கொண்டு பணியாற்றுங்கள். ஒவ்வொருவரும் பிரதேச உணர்வுகளையும் தனித்துவ பண்புகளையும் கைவிட்டு, தமிழ் தேசியத்துக்கான சேவையாளர்களாக மாறுங்கள். அதுவே தமிழ் மக்களின் எதிர்பார்க்கையாக உள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நலம்வேண்டின் நாண்உடமை வேண்டும் குலம்*
*வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு.*
திருக்குறள்

# நமது நோக்கு

## கடந்த காலத்தை நினைவுபடுத்தும், ஜே.வி.பி. யினரின் நடவடிக்கைகள்

இலங்கையின் அரசியலில் எல்லாவகையிலும் தன்னை ஒரு மூன்றாவது வலுவான சக்தியாக படிப்படியாக பல்வேறு உத்திகள் மூலமும் நடந்து முடிந்த தேர்தலின் மூலமும் நிலை நிறுத்துவதில வெற்றிகண்டுள்ள ஜே.வி.பி, தற்போதைய அரசை, அதன் வலுவை மட்டுமல்ல அதன் எதிர்கால ஆயுளையும் நிர்ணயிக்கும் ஆற்றலையும் தன்வசம் கொண்டுள்ளதன் காரணமாக, நிறைவேற்று அதிகாரப் பலம்மிக்க ஜனாதிபதியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மேலாதிக்கம் செய்யும் சக்தியாகவும் தன்னை இனங்காட்டத் தொடங்கியுள்ளது.

முடிந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப்பெரும்பான்மைப் பலத்தை பெறாதநிலையில் ஒரு தொங்கு நாடாளுமன்றத்தை அமைக்கவேண்டிய நிலை உருவானபோது, தேசியப்பட்டியல்மூலம் தெரிவான மூன்று உறுப்பினர்கள் உட்பட 89 உறுப்பினர்களை நாடாளுமன்றத்திலும், ஆட்சியைப் பொறுப்பேற்ற அரசின் மொத்த உறுப்பினர் தொகையிலும், பெற்றிருந்த ஜே.வி.பிக்கு தேர்தலின் முன்னான உடன்படிக்கையின் அடிப்படையில் நான்கு அமைச்சுக்களையும், நான்கு பிரதியமைச்சுக்களையும் அவர்கள் விரும்பியபடியே ஜனாதிபதி அளித்த போதிலும், ஆளும் கூட்டணியில் மொத்தமுள்ள 106 உறுப்பினர்களில் மூன்றிலொரு பங்குக்கும் அதிகமான உறுப்பினர்களைப் பெற்றிருந்த ஜே.வி.பி க்கு அதுபோதுமானதாக இருக்கவில்லை.

குறைந்தது மற்றுமொரு அதிமுக்கிய அமைச்சுப் பொறுப்பையாவது வலியுறுத்திப் பெறவிரும்பிய ஜே.வி.பி யினர் மகாவலி அபிவிருத்தி அமைச்சே அதற்கு பொருத்தமானது எனத் தெரிவுசெய்து அதனைத் தமக்கு வழங்குமாறு ஜனாதிபதியை நிர்ப்பந்தித்ததுடன், அப்படி வழங்காவிடின் ஏனைய அமைச்சுக்களையும் பொறுப்பேற்கப்போவதில்லை என அடம்பிடித்த போதுதான், ஜே.வி.பியுடனான உறவுமூலம் எத்தகைய ஆபத்தான நெருக்கடிகளைத் தான் எதிர்காலத்தில் சந்திக்க வைக்கப்போகிறது என்ற அச்சம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

மகாவலி அமைச்சு தொடர்பான கோரிக்கையில் விட்டுக்கொடுத்து எதனையும் செய்யமுடியாத நிலையில் ஜனாதிபதி ஜே.வி.பியினருடன் அது தொடர்பாக பல தடவை பேச்சுக்களை மேற்கொண்டு சுமுக நிலையை ஏற்படுத்த முயற்சித்தபோதும் அவர்கள் எதற்கும் விட்டுக்கொடுப்பதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் அரசை எந்த நேரமும் அச்சுறுத்தி வைத்திருக்கக்கூடிய அதனுடன் ஒட்டியும், ஒட்டாமலும் இருந்து தனது அபிலாஷைகளை அழுத்தங்களின் அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்ளும் மூன்றாந்தர ராஜதந்திரத்தை கடைப்பிடிக்கவே ஜே.வி.பி தற்போது விரும்புவதும் தெரிகிறது. இதே நிலையில் சபாநாயகர் தெரிவில் அரசுக்கு ஏற்பட்ட தோல்வியை அடுத்து அவர்கள் நாடாளுமன்றத்திலும் பின்னர் அதற்கு வெளியேயும் ஹெல உறுமய உறுப்பினர்களுக்கு எதிராக நடந்துகொண்டவிதம் வெளிப்படையான கண்டனங்களுக்குள்ளாகியுள்ளதுடன், ஜனாதிபதி ஜே.வி.பி யினரை ஹெல உறுமய உறுப்பினர் விவகாரங்களில் கண்ணியமாக நடக்குமாறு எச்சரிக்கை செய்ய வேண்டிய நிலையையும் ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும் ஜே.வி.பி.யினர் நாடாளுமன்ற ஜனநாயக நாகரிகத்துக்கு இன்னும் அருகதையுடையவர்களாக இல்லை என்பதையே அவர்களது நடவடிக்கைகள் நிருபித்து வருவதாக அவர்களைப்போன்ற பேரினவாத அமைப்பினரான ஹெல உறுமயக்காரரே தெரிவித்துள்ளதுடன், இது 1980 களின் இறுதிப்பகுதியில் நிலவிய அச்சமூட்டும் நிலைமையை மீண்டும் நினைவுபடுத்துவதாக உள்ளது என்றும் வர்ணித்துள்ளனர்.

ஜே.வி.பி.யினர் ஆயுதபாணிகளாகச் சென்று ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண. ஓமலே சோபிததேரரின் போதிராஜ அறநிலையத்தினுள் நுழைந்து அங்கிருந்த பொலிஸாரையும் மிரட்டி விட்டு கறுப்புக் கொடிகளைக் கட்டி அட்டகாசம் செய்துள்ளதாக அறியவந்துள்ளமையானது மேற குறிப்பிட்ட வர்ணனை சரியானதுதான் என்ற கருத்துருவாக்கம் ஏற்படக் காரணமாகவும் உள்ளது.

இதேவேளை, மகாவலி அபிவிருத்தி அமைச்சை ஜே.வி.பி. கோருவதற்கு காரணம் அப்பகுதி புதிய குடியேற்ற வாசிகளான அடிமட்ட மக்கள் மத்தியில் தமது சொல்வாக்கை வலுப்படுத்த விரும்புவதுமட்டுமல்ல அப்பகுதியிலேயே இலங்கையின் பாதுகாப்புத்துறைக்கு அடுத்தபடியாக ஆயுதங்கள் இருக்கின்றன என்பதுமாகும். இப்பகுதியை பாதுகாக்கும் ஊர்காவற் படை போன்ற குழுக்களிடம் பெருமளவு ஆயுதங்கள் புழக்கத்தில் உள்ளமையால் அவர்களைத்தம்வசப்படுத்தி, அரசு பலவீனமாகி அல்லது உள்நாட்டு குழப்பங்கள் அதிகமாகி நெருக்கடி நிலை தோன்றும்போது மீண்டுமொரு ஆயுதக் கிளர்ச்சியை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்ற முயல திட்டமிடுவதாகவும் இருக்கலாம் என்ற அரசியல் நோக்கர்களின் அச்சம் தரும் கருத்துக்களையும் நிராகரித்துவிட முடியாது.

கடந்தகால ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் இதற்கு ஆதாரச் சான்றுகளாக உள்ளன.

எல்லாவகையிலும் தள்ளாடும் ஆட்சி, தடுமாறும் ஜனாதிபதி அச்சுறுத்தும் ஜே.வி.பி. என இலங்கையின் அரசியல் சூழல் நம்பிக்கை தருவதாக இல்லை என்பது யதார்த்தமான ஒன்றேயாகும்.

# நாடும் நடப்பும்




# நோர்வே அரசின் உயர்மட்டக்குழு அடுத்தவாரம் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் பணியை மேற்கொள்ளும் வகையில் நோர்வே நாட்டின் உயர்மட்டக்குழு அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு வரவிருக்கிறது.

அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகளை தொடருவதற்கு அனுசரணையாளராக செயலாற்ற வருமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நோர்வேப் பிரதமர் கஜெல் பொன்டவிக்கிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனை நோர்வேப் பிரதமர் பொன்டவிக் ஏற்றுக் கொண்டதுடன் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தலைமையில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரை அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு அனுப்ப இருப்பதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்புக்கு வருகை தரவிருக்கும் நோர்வே தூதுக்குழுவினர் முதலில், கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார்கள் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தில், கடந்த வருடம் நவம்பர் மாதம் 3 அமைச்சுக்களை பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை அடுத்து நோர்வே தனது அனுசரணையாளர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு யுத்தத்திற்கு எதிரான அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் யுத்தத்திற்கெதிரான முன்னணி என்ற அமைப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில்கூடி மீண்டுமொரு யுத்தம் ஆரம்பிப்பதனை எதிர்ப்பதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தையை மீள முன்னெடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளதாக கனேடிய வானொலியொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பெருமளவு சிங்களப் புத்த ஜீவிகள் கலந்துகொண்டனர். இதில் இன்ரநஷனல் அலேட் டைச் சேர்ந்த குமார் ரூபசிங்க, பேராதனை பல்கலைககழக பொருளியற்துறை விரிவுரையாளர் கலாநிதி சுமணசிறிலியனகே, பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் தபால தொலைத் தொடர்புகள் அமைச்சராக இருந்த இந்திக குணவர்த்தன. மற்றும் பல முதன்மையான பௌத்த பிக்குகளும் கலந்து கொண்டதாக அந்த வானொலி மேலும் தெரிவித்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் - தெற்கு போர் நடவடிக்கைகளைக் கைவிட்டு சமாதானப் பேச்சு வார்த்தையை முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன், தேர்தல் கால நடவடிக்கையின் போது சமாதானப் பேச்சுவார்த்தையை ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இடைநிறுத்தம் செய்தமையானது ஒரு பிழையான நடவடிக்கையாகும். இதன் மூலம் இலங்கை இரண்டாகப் பிளவுபடுவதற்கே வழிகோலப்படுகிறது.

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்ற வெற்றியானது சமாதானப் பேச்சு வார்த்தையை முன்னெடுத்து செல்வதில் தற்போதைய அரசாங்கம் எவ்வளவு தூரத்திற்கு செயற்படபபோகின்றதென்ற பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூட்டத்தில் கலந்து கொண்டோர் கேள்வியெழுப்பினர்.

# தண்ணீர் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளில் கோடை காலத்தில் ஏற்படும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதன்படி மன்னாரிலுள்ள வங்காலை, மன்னார் நகரம், எருக்கலம்பிட்டிப் பகுதிகளுக்கே இந்தத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் அதனை நிவர்த்தி செய்யவே நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதற்கமைய ஆசிய அபிவிருத்தி வங்கியின் 5 கோடி 66 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் நிகொட் நிறுவனம் மன்னார் மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக தெரியவருகிறது.

(201)

# ஹக்கீமை பிரதிசபை முதல்வராக பரிந்துரைக்க ஐக்கியதேசியக் கட்சி தலைவர்களுடன் பேச்சு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமை பிரதி சபை முதல்வராக பரிந்துரை செய்வதற்கு ஐக்கிய தேசிய கட்சி அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

முஸ்லிம் காங்கிரசின் தலைவரை பிரதி சபை முதல்வர் பதவிக்கு பரிந்துரைசெய்யுமாறு விடுத்த வேண்டுகோளை அடுத்து கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

இதேவேளை, இலங்கைத் தொழிலாளர்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமானை பிரதிக் குழுக்களின் தலைவராக நியமிப்பதற்குப் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.


இதேவேளை, இருவரும் கட்சியிலிருந்து விலகாது தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சி தம்வசம் வைத்திருப்பதற்காக குறித்த பதவிகளை வழங்கும் என்று அரசியல் அவதானி [illegible] தெரிவித்தனர்.

(01)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) ப் பரீட்சை
## பௌதீகவியல் - பகுதி I மாதிரி வினாத்தாள்

நேற்றைய தொடர்ச்சி...

40. விரியலாக்கியின் வலுநயம் 100 ஆகும். அதன் வலுநயம்
1) 10 2) 20 3) 100 4) 200 5) 10000


41. 

செயற்பாட்டு விரியலாக்கியின் திறந்த தடநயம் $10^5$ ஆகும். அதன் வழங்கல் வோல்ற்றளவு $\pm 15V$ ஆகும். விரியலாக்கியில் பெறப்படும் பயப்பு அழுத்த வேறுபாடு.
1) + 100 V 2) - 200V 3) – 15V 4) + 15V 5) + 200 V


42. காந்தப்புலம் ஒன்றுக்கு செங்குத்தாக தளம் இருக்கக்கூடிய வகையில் வைக்கப்பட்டுள்ள மூடிய செவ்வகத்தடம் ஒன்று புலத்தில் இருந்து நீக்கப்படும்போது சுருளிப்பாயும் மின்னியம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது
1) தடத்தின் பரப்பில் தங்கியிருக்கும்
2) தடத்தின் முறுக்குகளின் எண்ணிக்கையில் தங்கியிருக்கும்.
3) புலத்தின் காந்தப்பாய அடர்த்தியில் தங்கியிருக்கும்.
4) தடத்தின் தடையில் தங்கியிருக்கும்.
5) அகற்றப்படும் நேரத்தில் தங்கியிருக்கும்.

43. மீகடத்தும் நிலையில் உள்ள மீகடத்திகள் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A: மீகடத்திகளினூடு காந்தவிசைக்கோடுகள் செல்லாது.
B: மீகடத்தியின் தடை பூச்சியமாக இருக்கலாம்.
C: மீகடத்திகளைக் கொண்டு மிகவும் வலிமைவாய்ந்த மின்காந்தங்களை உருவாக்கலாம். இவற்றுள் சரியானது.


1) A மட்டும் 2) B மட்டும் 3) A, B மட்டும் 4) B, C மட்டும்
5) A, B, C மட்டும்

44 


சுற்றில் 200Ω தடையினூடாக மின்னோட்டத்தை சரியாக தருவது.



1) 2) 3) 4) 5)

45. R ஆரையும் ρ அடர்த்தியும் உடைய கோளொன்றில் தப்புவேகம V ஆயின், 2R ஆரை உடையதுமான கோளொன்றில் தப்புவேகம்.
1) V/2 2) V 3) 2V 4) 2 √2 V 5) 4 V

46) 

இரு நிலைக்குத்தான சமாந்தர கம்பிகள் ஒரே திசையில் சமனான மின்னோட்டங்களைக் காவுகின்றன. O என்பது இருகம்பிகளுக்கும் இடையில் நடுப்புள்ளி. இரு கம்பிகளினதும் நிலைக்குத்து தளத்திற்கு செங்குத்தாக கிடை அச்சு வழியே அளக்கப்படும் தூரம் X உடன் காந்தப்பாய அடர்த்தி B மாறுவதைக் காட்டும் வரைபு.


1) 2) 3) 4) 5)

47) 

இங்கு $V_s$ என்பது ஒழுங்காக்காத வோல்ற்றளவு, $R_s$ பாதுகாப்புத் தடை, $R_L$ சுமைத்தடை பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A: இங்கு செனர் இருவாயி பின்முகக்கோடலில் பயன்படும்.
B: செனர் இருவாயியினூடு மின்னோட்டம் $R_L$ இல் தங்கியிராது.
C: செனர் இருவாயி முன்முகத் தேடலில் பயன்படும்.
இவற்றில் உண்மையானவை
1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும்
4) A,B மட்டும் 5) B,C மட்டும்


48) தரப்பட்டுள்ள உண்மை அட்டவணைக்கான சுருக்கச் சமன்பாடு

| A | B | C |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 1 |


1) $A\bar{B} + AB$ 2) $AB + A\bar{B}$ 3) $A.B + A.\bar{B}$
4) $\bar{A}B + A\bar{B}$ 5) $\bar{A}B + AB$

49) $^{238}_{92}U$ சமதானியின் α, β காலல் $^{206}_{82}Pb$ ஆக மாறுயிலிருந்து காலப்பட்ட α துணிக்கைகளினதும் β துணிக்கைகளினதும் எண்ணிக்கைகள் முறையே.
1) 8, 0 2) 16, 5 3) 8, 5 4) 8, 6 5) 8, 12


50) சமாந்தர ஒளிக்கற்றை ஒன்றுக்கு குறுக்காக வைக்கப்பட்டுள்ள ஒடுக்கும் வில்லை ஒன்றையும், திரை ஒன்றையும் படம் காட்டுகின்றது. திரையில் P,Q,R என குறிப்பிடப்பட்ட புள்ளியில் துலக்கமானது ஏறுவரிசை.
1) P,Q,R 2)R,Q,P 3) P,R,Q,
4) R,P,Q 5) Q,R,P




51) இறுதி விம்பம் முடிவிலியில் உண்டாகுமாறு செப்பம் செய்யப்பட்ட எளிய நுணுக்குக்காட்டி ஒன்றின் பெரிதாக்கும் வலு M ஆனது, அதன் மவிய நீளம் f இன் நேர்மாறு உடனான மாறல் பின்வருவனவற்றுள் எது திறம்படக் காட்டுகின்றது.




1) 2) 3) 4) 5)


52) 

படத்தில் காட்டப்பட்டுள்ளவை பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
அ) B புவித்தொடுப்பு செய்யப்பட்ட ஒரு உலோகத் தகடு
ஆ) A மறையேற்றத்தினை காவும் ஒரு உலோகக் கோளம்
இ) B இனுள்ளே மின்புலம் பூச்சியம்

இவற்றுள் சரியானது.
1) அ மட்டும் 2) ஆ மட்டும் 3) அ,ஆ மட்டும் 4) அ,இ மட்டும்
5) அ,ஆ,இ எல்லாம் சரி


53) 

சுற்றில் XY இனூடான மின்னோட்டம்
1) 0 2)1A 3) 4/3A 4) 3/2A 5)2A


54) 


ஒரே மி.இ.வி E யும் $r_1, r_2$ $(r_1 > r_2)$ உட்தடைகளையும் கொண்ட இரு மின்கலங்கள் x,y தொடராக இணைக்கப்பட்டு சேர்மானத்தின் குறுக்கே மாறும் தடை R இணைக்கப்பட்டுள்ளது. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A: R மாற்றப்படும் போது R இன் குறித்த அழுத்த வேறுபாடு பூச்சியமாக வரலாம்.
B: R மாற்றப்படும்போது R இன் குறித்த பெறுமானத்திற்கு Y இன் குறுக்கே அழுத்த வேறுபாடு பூச்சியமாக வரலாம்.
C: R மாற்றப்படும் போது R இன் குறித்த பெறுமானத்திற்கு X,Y இன் சேர்மானத்தின் குறுக்கே அழுத்த வேறுபாடு பூச்சியமாக வரலாம் இவற்றுள் சரியானது.
1) A மட்டும் 2) B, C மட்டும் 3) A, C மட்டும்
4) A, B மட்டும் 5) A,B,C மட்டும்




கிடையான கடதாசி அட்டை ஒன்றின் மையத்தினூடு நிலைக்குத்தாக நேரிய கடத்தி AB வைக்கப்பட்டு அட்டையின் மீது காந்த ஊடுவைக்கப்பட்டிருப்பதைப் படம் காட்டுகின்றது. காந்த ஊடுவிசையாக உள்ளது. கடத்தியினூடு மின்னோட்டம் மேல்நோக்கிப் பாயும்போது காந்த ஊடுருவியின் நிலையை




57 
தரப்பட்டுள்ள நிலைமாற்றியின் முறுக்குகளின் விகிதம் 1:4 ஆகும். இந்த நிலைமாற்றியின் திறன் 80% ஆகும். துணை சுற்றினூடாக மின்னோற்றம் Is இன் பெறுமானம்.

1) 0.1 A 2) 0.4 A 3) 0.5 A 4) 0.6 A 5) 0.8 A


58) 


படத்தில் காட்டப்பட்ட சுற்றில் எந்தப் புள்ளிகளுக்கு இடையேயான சமனாகக் கொள்ளளவும் உயர்வாக இருக்கும்.
1) P யும் Q வும் 2) Q யும் R உம்
3) R இற்கும் S இற்கும் 4) P யும் S உம்
5) Q வும் S உம்

59) பின்வருவனவற்றில் வேகத்தின் அலகை சரியாக குறிப்பது
1) $cms^{-1}$ 2) $cms^{-1}$ 3) $cm\ s^{-1}$ 4) $CMS^{-1}$ 5) $ms^{-1}$

60) 


படத்தில் காட்டப்பட்டுள்ளது போல் பாரமற்ற விற்சுருள் ஒன்றில் கட்டித் தொங்கவிடப்பட்ட சிறிய சட்டக் காந்தம் விரிச்சுருளினுள் ஓர் எளிமை இசை இயக்கத்தை ஆற்றுமாறு இடம்பெயர்ந்து விடப்படுகின்றது. A,B இடையே தூண்டப்பட்ட மின்னியக்க விசையின் நேரத்துடனான மாறிலை சரியாகக் காட்டுவது.


1) 2) 3)


4) 5)

கருணாநிதி B.sc
ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி

# ஈராக்கில் அமெரிக்கக் கடற்படையினர் மீது படகுகள் மூலம் தற்கொலைத் தாக்குதல்



(பக்தாத்)

பஸ்ராவின் தென்பகுதியில் இரு எண்ணெய் தாங்கிப் படகுகள் மூலம தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் இரு அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஐவர் காயமடைந்துள்ளனர். எண்ணெய்த் தாங்கிகள் மீது கடலில் தாக்கப்பட்ட முதலாவது தாக்குதல் இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலின் போது எண்ணெய்த் தாங்கிகளின் எண்ணெய் நிரப்பும் 'பாக்கர்' கவால் அல் சமயா துறைமுகப் பிரதேசத்தில் சிறிய படகுகள் மூலம் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எட்டுப் பேரைக் கொண்ட கூட்டுப் படையைச் சேர்ந்த கடற்படையினர் சிறிய படகொன்றினைத் தடுக்க முற்பட்ட வேளையில் படகு வெடித்துச் சிதறியதாகவும், இந்தச் சம்பவத்தில் இரு அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிறிது நேரத்தில் மேலும் இரு படகுகளும் வெடித்துச் சிதறியுள்ளன. ஆனால், எண்ணெய் நிரப்பும் பிரதேசத்திற்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை என அமெரிக்க, பிரித்தானிய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கின் முக்கிய கடற்துறைமுகமான 'உமா குசானில்' இருந்து 9 மைல்களுக்கு அப்பால் தாக்குதல் நடத்தப்பட்ட 'பஸ்ரா' துறைமுகம் அமைந்துள்ளது. இந்தத் துறைமுகம் அரசியில் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததென பி.பி.ஸியின் செய்தியாளர் லூஸி வில்லி



யம் தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு அமெரிக்கக் கப்பலான 'யு.எஸ்.எஸ். கோலி' ஈமனுக்கு வெளியே அமைந்துள்ள கடற் பிரதேசத்தில் எண்ணை நிரப்புவதற்குச் சென்றபோது தகர்க்கப்பட்டது. அந்தச் சம்பவத்தில் 17 அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப்பட்டனர். அல்கொய்டா அமைப்பே இந்தத் தாக்குதலுக்குக் காரணமெனத் தெரிக்கப்பட்டது.

# நைஜீரியாவில் பதுங்கித் தாக்குதல்; இரு அமெரிக்கர் உட்பட ஐவர் பலி!

நைஜீரியாவின் எண்ணெய்வள மாகாணமான டெல்ராவில் நடந்த பதுங்கித் தாக்குதலில் இரு அமெரிக்கர் உட்பட ஐந்துபேர் கொல்லப்பட்டனர்.

கிழக்கு வாரியில் உள்ள பெனின நதியில் 9 பேர்கொண்ட படகு பயணம் செய்தவேளை அந்தப் படகின்மீது நடத்தப்பட்ட பதுங்கித் தாக்குதலிலேயே மேற்படி ஐவரும் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட அமெரிக்கர்கள் இருவரும் சிலரோன் ரெஸ்கோ என்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்த நிறுவனம் நைஜீரியாவில் எண்ணெய் வர்த்தக உடன்படிக்கை செய்தது குறிப்பிடத்தக்கது.

டெல்ரா பெருமளவு எண்ணெயை உற்பத்தி செய்யும் மாகாணம். கடத்தல், பதுங்கித் தாக்குதல் என்பன இந்த மாகாணத்தில் சர்வ சாதாரணமான நிகழ்ச்சி என பி.பி.ஸியின் செய்தியாளர் ஆனா போசிலோ தெரிவித்தார்.

சிலரோன் ரெஸ்க்கோ நிறுவனம் தகவல் தெரிவிக்கையில் -

துப்பாக்கிதாரிகள் கப்பலை நோக்கி சுட்டதாகவும், இதில் ஐவர் கொல்லப்பட்டதாகவும், இருவர் காயமடைந்ததாகவும் மேலும் இருவர் காணாமற் போயுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. முழுமையாக ஆயுதம் தரித்த பயங்கரவாதிகள் நிர்வாகத்தின் பாதுகாப்பு அலுவலர்களை அகற்றும் எண்ணத்துடனே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஆரம்பத் தகவல்கள் கிடைத்ததாகவும் கூறப்பட்டது.

மூடப்பட்டிருந்த எண்ணெய்க் கிணறுகளை மீண்டும் திறந்த பின்பே இந்தக் குழு திரும்பியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணெய்க் கிணறுகள் ஆயுதம் தாங்கிய கூட்டத்தால் கடந்த வருடம் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்ரியாவில் ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது

ஒஸ்ரியாவில் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பபதற்காக அந்நாட்டு மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

கொன்சவேற்றிவ் கட்சியைச் சேர்ந்த தற்போதைய வெளிநாட்டமைச்சர் பெனிற்றா பெராரோ மற்றும் சமூக ஜனநாயக கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உதவிச் சபாநாயகர் கீனிஸ் பிஷ்ஷர் இருவரும் இந்தப் பதவிக்காகப் போட்டியிடுகின்றனர்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கொன்சவேற்றிவ் கட்சியைச் சேர்ந்த பெண் வேட்பாளரான பெனிற்றா பெராரோ வெற்றி பெற்றால் அவர் ஒஸ்ரியாவின் முதலாவது ஜனாதிபதியாவார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பெனிற்றா பெராரோ சர்வதேச ரீதியில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது தேர்தல் சுவரொட்டிகளில் ஒஸ்ரியாவுக்காகக் குரல் கொடுக்கும் பெண் சிங்கமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இளைஞர்களின் வேலை வாய்ப்புக்கள் மற்றும் முதியோரின் பாதுகாப்பு என்பனவுமே இவரது ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதிகளாகும்.

# பயங்கரவாதத்திற்கெதிரான போரைநடத்த மொராக்கோவுடன் இணையவுள்ளோம்

## ஸ்பெயின் பிரதமர் தெரிவிப்பு

மொராக்கோவுடன் இணைந்து பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடவுள்ளதாக ஸ்பெயின் பிரதமர் ஜோஷ் லூயிஸ் றொட்ரிக் ஸ்பாட்டிரோ தெரிவித்தார்.

மொராக்கோ மன்னர் மற்றும் பிரதமர் டிறிஸ் ஜெட்டோ ஆகியோருடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் பின்னரே இந்தக் கருத்தை ஸ்பெயின் பிரதமர் வெளியிட்டுள்ளார். மட்றிட் ரயில் குண்டுவெடிப்புத் தொடர்பாக மொராக்கோ நாட்டைச் சேர்ந்த 14 பேர் சந்தேகத்தின் பேரில் ஸ்பெயின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த நாட்டுக்கு ஸ்பெயின் பிரதமர் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

ஸ்பெயின் நாட்டுப் பிரதமர்கள் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் மொராக்காவுக்கு விஜயம் செய்வதை தமது பாரம்பரியமாகக் கொணடுள்ளனர். ஸ்பெயின் பிரதமர் தனது விஜயத்தின்போது - கஸபிலாங்காவில் தொடர்ச்சியாக நடைபெற்ற குண்டுவெடிப்பில் இறந்தவர்களின் நினைவுத் தூபிகளின் திறப்பு நிகழ்விலும் பங்குகொண்டிருந்தார்.

கஸபிலாங்கா ரயில் குண்டுத் தாக்குதலில் பங்குகொண்டவர்கள் என்று கருதப்படும் பலர் ஸ்பெயினில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதனிடையே போதைப் பொருள் கடத்தல், குடிவரவு, கடலில் மீன்பிடித்தல் தொடர்பான பிரச்சினைகளால் ஸ்பெயின் மொராக்கோ ஆகிய நாடுகளின் உறவுகள் பாதிக்கப்பட்டிருந்ததாக பி.பி.ஸியின் செய்தியாளர் கட்யா அட்லர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரு நாட்டுத் தலைவர்களிடையே நடைபெற்ற பேச்சுக்களில் மட்றிட் ரயில் குண்டுத் தாக்குதல் தொடர்பான பேச்சுக்கள் முக்கியமாக இடம்பெற்றிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அழகும், கலைத்துவமும் மிக்க நவீன முறையிலான நம்பகமான இடம்
சுரபி பதிப்பகம்
பத்திரிகைகள் விழா மலர்கள் சஞ்சிகைகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள் மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 2225107

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தமிழரசுக் கட்சி நேற்று ஆராய்வு!

தமிழரசுக் கட்சியின் பொதுக் கூட்டம் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பேராசிரியர் சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்திட்டங்கள், அதன் வளர்ச்சி, முன்னர் தமிழரசுக் கட்சியில் நிகழ்ந்த தவறுகள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இனிவரும் காலங்களில் தமிழரசுக் கட்சியில் இளைஞர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமெனவும் இளைஞர் சமூகத்துக்கு அரசியல் தொடர்பாக பூரண அறிவினை வழங்கவேண்டும் என்றும் -

வாக்குகளை அதிகம் பெற்று நாடாளுமன்றம் செல்வது தமிழரசுக் கட்சியின் நோக்கம் அல்ல எனவும் தமிழர் அபிலாஷைகளைப் பெறுவதே தமது நோக்கம் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

## சபாநாயகர் தெரிவின் எதிரொலி

# ஹெல உறுமய பிக்குகளுக்கு எதிராக தெற்கில் வன்முறைகள் தொடர்கின்றன

ஜாதிக ஹெல உறுமய பிக்குமாருக்கு எதிரான வன்முறைகள் தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டபோதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் நாடாமன்றத்திற்குத் தெரிவான பிக்குமாருக்கு எதிரான மரண அச்சுறுத்தல்கள் தொடரும் அதே நேரம் விகாரைகள் மீதான தாக்குதல்களும் தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய போதி ராஜ விகாரைக்கு முன்னால் நேற்று முன்தினம் கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. அத்துடன், அங்கிருந்த பிக்குமாருக்கு எதிராக மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜே.வி.பி மீது குற்றம் சுமத்தப்பட்ட போதும் அதனை அந்த முன்னணி மறுத்துள்ளது. நேற்று முன்தினம் இரவு பேருவளை அபினவாராமயவுக்குச் சென்ற இருவர் ஹெல உறுமயவின் இணைப்புச் செயலர் எடிகல்லே விமலசார தேரருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இவர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் அவர்களை விடுவிக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் ஒருவர் வலியுறுத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹுங்குராண்ஹெத்த பகுதியில் விகாரை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டன.

ஜாதிக ஹெல உறுமயவின் உயர்பீடத் தலைவர் எல்லாவெல மெத்தானந்த தேரருக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வு நேற்று மாலை அவிசாவளையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வு நடைபெறும் மைதானத்திலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. எனினும், பின்னர் அவை அகற்றப்பட்டன. நேற்று முற்பகல் பன்னிப்பிட்டிய பகுதியில் ஜாதிக ஹெல உறுமயவிற்கு எதிரான சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

### லஞ்சம் தரமுயன்றதாக ஹெல உறுமய குற்றச்சாட்டு

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபாநாயகர் தெரிவின்போது தமது தரப்பு வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்தால் 50 மில்லியன் ரூபா தருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்ததாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும், இவ்வாறான லஞ்சம் வழங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றாலும் அரசாங்க தரப்பிலிருந்தே அதிகளவான லஞ்சம் வழங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக ஜாதிக ஹெல உறுமயவின் செயலர் உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார். (01)

# பீட்டர்சன் தலைமையிலான நோர்வே குழு அடுத்த வாரம் கொழும்பு வருகின்றது!

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்சன் தலைமையிலான குழுவினர் அடுத்த வாரம் இலங்கை வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவருடன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரும் இலங்கை வரவுள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமுகமாக நோர்வே மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நோர்வே பிரதமர் மக்னே பொண்டவிக்கிடம் முன்வைத்திருந்தார்.

இதனடிப்படையிலேயே அந்த நாட்டின் குழுவினர் இலங்கை வரவுள்ளனர். இவர்கள் இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை ஆகியோரைச் சந்திக்கவுள்ளனர்.

# இடைக்கால நிர்வாகம் குறித்தே புலிகளுடன் பேச்சு நடத்த முடியும்!

## ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடன் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக வரைபு குறித்தே ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தையை நடத்த முடியும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டில் சிறுபான்மை அரசாங்கம் ஒன்று குறித்து பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றபோதிலும், ஜனாதிபதியிடம் உள்ள நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு அவரால் சமாதான முனைப்புகளை மேற்கொள்ள முடியும்.

எனினும் அவர் அதனை தீர்க்கதரிசனத்துடன் மேற்கொள்வாரா என்பதே கேள்வியாகும்.

ஏற்கனவே தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனும் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகமே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அடுத்த கட்டமாக இருக்கவேண்டும் எனக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வெளியுறவு...

மற்றும் சர்வதேச நாடுகளின் இலங்கை மீதான கவனம் குறித்து விசேடமாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

முன்னைய அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பாகவும் தற்போதைய அரசு அதனைத் தொடர்வது குறித்தும் கதிர்காமர் பேச்சு நடத்துவார்.

முன்னாள் சீன வெளிவிவகார அமைச்சரும், தற்போதைய சீன அரச சபையின் உறுப்பினருமான தல் ஜியானுடனும் கதிர்காமர் பேச்சு நடத்தவிருக்கிறார்.

சீனாவில் தங்கியிருக்கும்போது ஆசிய பசுபிக் நாடுகளின் சமூக, பொருளாதார கவுன்ஸிலில் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவிலும் கதிர்காமர் பங்கேற்கவுள்ளார்.

63 நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பின் கூட்டத்தில் புதிய யுகத்தில் பூகோள மயமாகக் கலை, பிராந்திய ஒத்துழைப்பு, அபிவிருத்தி மூலம் எதிர்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

ஷங்காயில் நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் கதிர்காமர், ஏனைய ஆசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

சீன விஜயத்தை முடித்துக்கொண்டு எதிர்வரும் 28 ஆம் திகதி புதுடெல்கி புறப்படும் கதிர்காமர், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சின்ஹாவையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் ஜஸ்வந்சின்ஹா, கதிர்காமரைச் சந்திப்பதற்காக பீஹாரில் இருந்து புதுடெல்கிக்குக் வரவுள்ளார்.

இந்திய விஜயத்தின்போது, பிரதமர் வாஜ்பாயின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ரா மற்றும் இந்தியத் தலைவர்கள் பலரையும் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## உப அலுவலகம்...

அம்பாறை மாவட்ட அரசியற்துறை தலைமை அலுவலகம் தம்பிலுவில் கிராமத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாக மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவிததார்.

ஏற்கனவே, அக்கரைப்பற்று சாகமம் வீதியில் இயங்கிய மாவட்ட அலுவலகம் அக்கரைப்பற்று பிரதேச அலுவலகமாக இயங்குமென்றும் அவர் தெரிவித்தார்.

## மகாவலி அமைச்சு...

இருந்த இந்த மத்திய குழுக் கூட்டம் இரவு 10 மணிக்கு மேல் நீடித்ததனாலேயே ஜே.வி.பியைச் சந்திக்க முடியாது போனதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இரவு 7 மணிக்கு ஜே.வி.பியினரைச் சந்திப்பதாகத் தெரிவித்த போதும் ஜனாதிபதி அவர்களை இறுதி நேரத்தில் சந்திக்காமை குறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிவித்தலில் ஜே.வி.பியினர் கோரும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு தொடர்பான பிரச்சினை இருகட்சியினராலும் சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ளதாலேயே தாம் இந்தக் கூட்டத்தினைக் கூட்டவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்விரு கட்சியினருக்குமான சந்திப்பொன்று இன்று மாலை இடம்பெறும் எனவும் அவ் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று இரவு நெடுநேரமாக இடம்பெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழுக்கூட்டத்தில் மகாவலி அபிவிருத்தி அமைச்சுத் தொடர்பான பிரச்சினையும் ஆராயப்பட்டதாக தெரியவருகிறது. (01)

## விகாரைகள்...

காரணமாகும்.

இதனையடுத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவிற்கு இது தொடர்பாக உடன்டி நடவடிக்கை எடுக்குமாறும் விகாரைகளுக்கும், பிக்குகளுக்குமான பாதுகாப்பை அதிகரிக்குமாறும் உத்தரவிட்டார்.

சில விகாரைகளுக்கு, தாம் ஏற்கனவே மேலதிக பாதுகாப்பை வழங்கியுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மகாவலி...

அவ்வாறு இல்லையெனில் - மகாவலி அதிகார சபையிலுள்ள ஆயுதங்கள் ஜே.வி.பியிருக்குச் சில வேளைகளில் உதவலாம். இதனால் மூன்றாவது கிளர்ச்சியும் உருவாகும் வாய்ப்புள்ளது.

இங்குள்ள அதிகார சபையில் 615 துப்பாக்கிகள் உள்ளன. இவற்றுள் 450 - ரி 56 துப்பாக்கிகளும், 136 றிப்பிற்றர் துப்பாக்கிகளும், 23 ரி-59 சீன பிஸ்ரல்களும், 23 றிப்பிற்றர் பிஸ்ரல்களும் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 800 பாதுகாப்பு ஊழியர்கள் இராணுவத்தினரால் பயிற்சி வழங்கப்பட்டுள்ளனர். அதில், 600 ஆயுதம் தாங்கியோர் மகாவலியின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லும் 200 நீர் வாய்க்கால்களைப் பாதுகாக்கின்றனர். இவற்றுள் ஐந்து பெரிய வாய்ககால்களும் அடங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய அரசாங்கத்தின்...

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன், நாட்டில் ஓர் நிலையான சமாதானம் ஏற்படுவதையே தானும் விரும்புவதாகவும் தமிழ்மக்கள் நினைப்பது போல அவர்களுக்கு சுதந்திரம் கிடைக்குமெனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜூடன் அமைச்சர் தென்னக்கோன் யாழ். நூல்நிலையத்தைச் சென்று பார்வையிட்டார்.

நூலகத்தின் குறைபாடுகளையும் ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அங்கு கலந்துரையாடினார்.

இதைவிட யாழ். நூலகத்தை முனனேற்றுவதற்கான சிறப்பான திட்டஙகள் தொடர்பாகவும் இவர் ஆராய்ந்தார். மேலும் சில இடங்களுக்கும் விஜயம செய்த அமைச்சர் தென்னக்கோன், மாலை 4 மணிக்கு கொழும்பு திரும்பினார்.

## ஆளும்கட்சி...

பிறப்பித்தாலும் - முரண்பாடுகள் மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவே தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை விரைவில் சந்திக்கும் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

## வடமேல் மாகாணசபையை...

இந்தத் தேர்தலில் 15 இலட்சத்து 63 ஆயிரத்து 815 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இவர்களில் 55.53 சத வீதமான - 8 லட்சத்து 68 ஆயிரத்து 363 வாக்காளர்கள் வாக்களித்திருந்தனர்.

இவற்றில் 37 ஆயிரத்து 619 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. 8 லட்சத்து 30 ஆயிரத்து 744 வாக்குகள் செல்லுபடியானதாக இருந்தன.

இதில் நான்கு லட்சத்து 91 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற (59.10 வீதம்) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 31 ஆசனங்களைக் கைப்பற்றியது.

மூன்று லட்சத்து 11 ஆயிரத்து 773 வாக்குகளைப் (37.53 வீதம்) பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு 19 ஆசனங்கள் கிடைத்தன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 24 ஆயிரத்து 173 (2.91 வீதம்) வாக்குகளைப் பெற்று இரு ஆசனங்களையும் கைப்பற்றியது. தேசிய அபிவிருத்தி முன்னணி 1073 வாக்குகளைப் பெற்றது.

ஏனைய கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் என்பன ஆயிரத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றன.

இந்தத் தேர்தலின் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வடமேல் மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. இந்தத் தேர்தலில் கடந்த பொதுத்தேர்தலைவிட குறைந்தளவான வாக்காளர்களே வாக்களித்ததுடன் - இரண்டு பிரதான கட்சிகளுக்கும் கிடைத்த வாக்குகளும் கணிசமாகக் குறைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்திலுள்ள 14 தேர்தல் பிரிவுகளிலும், புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் தேர்தல் பிரிவு தவிர்ந்த ஏனைய நான்கு தேர்தல் பிரிவுகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூடுதல் வாக்குகளைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு எமதுநிறுவனத்தில் வெற்றிடங்கள் இருப்பதால் தகுதியானவர்களிடமிருந்து (ஆண்கள் மட்டும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**❋கணினி பக்கவடிவமைப்பாளர்கள்**

(Photo shop, corel Draw, Pagemaker என்பன தெரிந்திருத்தல் வேண்டும்)

**❋ஒப்புநோக்குநர்கள்**

**தகைமை:** கா.போ.த. உயர்தர பரீட்சையில் சித்திபெற்றிருக்கவேண்டும்.
அனுபவமுள்ளவர்கள், ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**❋அச்சக முகாமையாளர்**

**தகைமை:** அச்சகத்துறையில் 10 வருட அனுபவம் எதிர்பார்க்கப்படுகிறது.

**தகைமையுடையோர் எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அலுவலக நேரத்தில் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.**

**நிர்வாக இயக்குநர்.**
**நமது ஈழநாடு,**
**இல.267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.